பக்கங்கள் ஆறு

Registered as a Newspaper

மங்கள வைபவங்களுக்
கேற்ப, உடுபுடைவைகள்
ராசி சில்க்ஸ்
70, நியூ மார்க்கட்
உட்புறம்
யாழ்ப்பாணம்.

# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை

விலை ரூ 2/-

★ காஞ்சிபுரம்
★ பெனரிஸ்
★ செவி தஞ்சூர்
★ பாட்லி
★ பட்டுவேஷ்டிகள்.
மற்றும் சகலவிதமான
பிளவ்ஸ் பீஸ் வகைகளுக்கும்
ராசி சில்க்ஸ்
70, நியூ மார்க்கட்
உட்புறம்
யாழ்ப்பாணம்.

சுடர்: 3 யாழ்ப்பாணம் விபவ ஆண்டு ஐப்பசி மீ 21 உ ஞாயிற்றுக்கிழமை ஹிஜ்ரி 1409 ற. அவ்வல் பிறை 25 ( 06 - 11 - 1988 ) UTHAYAN- A lively Tamil Daily கதிர்: 228

## எரிபொருள் விநியோகம் புதிய நடைமுறை

யாழ்ப்பாணம் நவ 6
எரிபொருள் விற்பனை நிலையங்களில் கடந்த சில நாட்களாக எரிபொருள் விநியோகத்தில் புதிய நடைமுறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

எரிபொருள் வாங்கச் செல்பவர்களிடமிருந்து அவர் பெற்றுக்கொண்ட எரிபொருளின் அளவு பெற்றுக்கொண்ட நேரம் வாகன இலக்கம், பெற்ற எரிபொருள் என்பவற்றுடன் எரிபொருள் பெற்றுக்கொண்டவரின் கையொப்பமும் பெறப்படுகிறது

இதற்கான பணிப்பை யாழ் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் விடுத்துள்ளது. [இ-9]

## சாவகச்சேரியில் சூட்டுச் சம்பவங்கள்

சாவகச்சேரி, நவ 6
சரசாலையில் வசிக்கும் மட்டுவில் தெற்கைச் சேர்ந்த சுந்தரம் என்ற இளைஞர் வியாழன் இரவு துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானார்.

வீட்டில் இருந்தவரை பெயர் சொல்லி அழைத்து துப்பாக்கியால் சுட்டவர்கள் உடன் தலைமறைவாகி விட்டனராம்.

சாவகச்சேரியில் மனோகரன் என்னும் இளைஞரும் துப்பாக்கிச் சூட்டுக்குப்பலியானார்

சென்ற திங்களன்று நுணாவில் கிழக்கில் அமைதிப்படையினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இரு இளைஞர்கள் பலியான சம்பவமும் இடம் பெற்றது

(ஒ 31)

மகாநாயக்கர்களின் வேண்டுகோளை அடுத்து

# ஜே. ஆர் - சிறிமா நேற்றுச் சந்திப்பு

## 10 அம்சக் கோரிக்கைகள் குறித்து ஆராய்ந்தனர்

கொழும்பு, நவம்பர் 6
ஜனாதிபதி ஜெயவர்த்தனவும சுதந்திரக்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவும் நேற்று நேருக்கு நேர் சந்தித்துப் பேச்சுக்கள் நடத்தினர்.


ஜனாதிபதி மாளிகையில் இச் சந்திப்பு இடம் பெற்றது.

ஏழு அரசியல் கட்சிகள் அணி சமர்ப்பித்த 10 அம்சக் கோரிக்கை குறித்தே பேச்சுக்கள் நடந்தன.

வன்செயல்கள் இடம் பெறாத நிலையில் சுதந்திரமான நியாயமானதேர்தல்களை எப்படி நடத்துவது என்பதுபற்றி இருவரும் பேச்சுக்கள் நடத்தினர் என்று அரசு விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டது.

நான்கு மகாநாயக்க தேரர்களின் வேண்டுகோளுக்கு இணங்கவே ஜே ஆர்-சிறிமா சந்திப்பு நேற்று இடம்பெற்றது. (இ-எ)

முச்சந்தி முரளி



அம்மையாரின் ரை ஆக்களுக்கும் சூடு விழத் தொடங்கிட்டுது...! இதுவும் தொடர் கதையாய் போகுமோ..,?

★ அரசுக்கு எதிரான

## எதிர்ப்பு நடவடிக்கைகளை தொடர ஜே. வி. பி. முஸ்தீபு

கொழும்பு, நவ் 6
தனது கோரிக்கைகளுக்கு அரசாங்கம் பணியாவிட்டால் தொடர்ந்து அரச எதிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள ஜே வி. பி திட்டமிட்டு வருவதாக கொழும்பில் இருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

எதிர்வரும் 10 ஆம் திகதியும் நாடளாவிய ரீதியில் ஹர்த்தால் கோரிக்கை ஒன்றை ஜே வி பி விடுக்கலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

இத்தினத்திலேயே ஜனாதிபதித் தேர்தலுக்கான நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்யப்பட இருப்பது குறிப்பிடத்தக்கது.

சுதந்திரக் கட்சியின் ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளரான திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவை ஏழுகட்சி கூட்டணியின் பொது (6ஆம் பக்கம் பார்க்க)

## வ.பி.போக்குவரத்து சபை அதிகாரி சுட்டுக்கொலை

யாழ்ப்பாணம். நவ 6
வடபிராந்திய போக்குவரத்துச் சபை பொதுசனத் தொடர்புஅதிகாரி திரு. கனகசபை தனபாலசிங்கம் [வயது 43] கடந்த வெள்ளிக்கிழமை சுட்டுக் கொலை செய்யப்பட்டார்.

இணுவிலில் உள்ள காலிங்டன் தியேட்டருக்கு அருகாமையில் வைத்து மாலை ஆறுமணி அளவில் அவர் சுடப்பட்டார்.

மருதனாமடத்தில் உள்ள வைரவர் ஆலயத்துக்குச் சென்று வணங்கிவிட்டு நான்கு பிள்ளைகளுடன் காரில் வீட்டுக்கு வந்துகொண்டிருந்த (4 ஆம் பக்கம் பார்க்க)

## சுதந்திரக் கட்சி ஆதரவாளர் உட்பட நால்வர் கொலை!

கொழும்பு நவ 6
தென்பகுதியில் நேற்று ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவாளர் மூவரும் சுதந்திரக் கட்சியின் ஆதரவாளர் ஒருவரும் கொல்லப்பட்டனர்.

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை ஆதரிக்கும் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவாளரைக் கொன்று வரும் தென்பகுதித் தீவிரவாதிகள் இப்போது சுதந்திரக் கட்சியின் ஆதரவாளர் ஒருவரையும் கொலை செய்துள்ளனர்.

எதிர்க் கட்சிகள் அனைத்தும் ஒரே வேட்பாளரை ஜனாதிபதித் தேர்தலில் நியமிக்க வேண்டும் என்ற கொள்கையை சுதந்திரக்கட்சி ஏற்றுக் கொள்ளாததாலேயே, சுதந்திரக் கட்சி ஆதரவாளர் ஒருவரையும் தீவிரவாதிகள் கொன்றனர் என்று கொழும்பில் தெரிவிக்கப்பட்டது (ஒ-எ)

மாலைதீவு ஆட்சிக் கவிழ்ப்பு முயற்சி:

## 11 கூலிப்படையினர் கைது!

கொழும்பு நவ 6
கூலிப்படையினரில் பதினொருபேர் கைதுசெய்யப்பட்டனர்.

இன்னும் ஒளித்திருப்பதாகக் கூறப்படுபவர்களைக் கைதுசெய்வதற்காக மலேயில் இந்தியப் படையினர் வீடுவீடாகத் தேடுதல் நடத்துவதாகவும் தெரிவிக்கப்பட்டது

புரட்சியில் ஈடுபட்டவர்கள் [illegible]

ரும் தமிழரே என்று மாலைதீவுப் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் இப்ராஹிம் தெரிவித்தார் என இலங்கை வானொலி கூறியது.

இதனிடையில் புரட்சிச் சதியில் மரணமடைந்த அரசபடையினர் குடும்பங்களுக்கு அஞ்சலி செய்யும் விதத்தில் நேற்று மலேயில் தேசியத் தினம் அனுஷ்டிக்கப்பட்டது

## ரயில் வந்து திரும்பியது

யாழ்ப்பாணம் நவ. 6
யாழ்-கொழும்பு வார இறுதி விசேஷ ரயில் சேவை நேற்று நடைபெற்றது.

நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை இரவு 11-35க்கு கொழும்பிலிருந்து புறப்பட்ட யாழ் தேவி ரயில் நேற்று நண்பகல் இங்கு வந்து திரும் (6 ஆம் பக்கம் பார்க்க)

## நடுக் கடலில் சுற்றிவளைப்பு

மாலைதீவில் புரட்சி நடத்தியவர்கள் தப்பிச் சென்றுகொண்டிருக்கும் இரண்டாவது படகை நடுக்கடலில் வைத்து இரண்டு இந்திய யுத்தக் கப்பல்கள் சுற்றிவளைத்துக் கொண்டிருக்கின்றன.

படகில் இன்னும் இந்தியத் துருப்புக்கள் ஏறவில்லை.

படகில் பணயக் கைதிகளாக உள்ளவர்களின் பாதுகாப்புக் கருதியே இந்தியத் துருப்புக்கள் கூலிப் படையினரின் படகில் ஏறாமல் இருந்து வருகின்றனர் என்று பி.பி.சி நேற்று மாலை அறிவித்தது.

30 பணயக் கைதிகள் வரை படகில் உள்ளனர் என்று கூறப்படுகிறது. அவர்களில்மாலைதீவுக் கப்பல் துறை அமைச்சர் அவரது மனைவி ஆகியோரும் உள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

பணயக் கைதிகளை விடுவிப்பது குறித்துப்படகில் உள்ள கூலிப்படையினருடன் இந்தியப் படையினர் பேச்சுக்கள் நடத்தி வருவதாகவும் அறிவிக்கப்பட்டது (இ-எ)

## வெளிநாட்டுப் பிரசைகளும்

'பணயக் கைதிகளில் இரண்டு சுவிட்ஷ் பிரசைகள் உட்பட வெளிநாட்டுப் பிரசைகள் சிலர் இருக்கின்றனர்''—என்று மாலைதீவு ஜனாதிபதி மாமூன் அப்துல் கையூம் ராய்ட்டருக்கு அளித்த பேட்டி ஒன்றில் தெரிவித்துள்ளார். (ஒ-எ)

## நேற்று மாலை வேளையில் நகரில் திடீர் ஊரடங்கு; படையினர் சோதனை

யாழ்ப்பாண நகரப் பகுதியில் நேற்று மாலை திடீர் ஊரடங்கு உத்தரவு அமுல்படுத்தப்பட்டு சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

நேற்று மாலை 4 30 மணிக்கு ஒலிபெருக்கி மூலம் ஊரடங்கு உத்தரவை அமைதிப்படையினர் அறிவித்தனர்

இதனையடுத்து யாழ் ஆஸ்பத்திரி வீதி, ஸ்ரான்லிவீதி கே கே. எஸ் வீதி ஆகியவற்றில் இந்திய அமைதிப்படையினர் நிலைகொண்டிருந்தனர்.

ஊரடங்கு காரணமாக மக்கள் அவசர அவசரமாக நகரைவிட்டு வெளியேறிக்கொண்டிருந்தனர்.

போக்குவரத்துக்களும் ஆரியகுளம் சந்தி. சிவன் கோவில் சந்தி ஆகியவற்றில் இருந்து நடைபெற்றன.

பலபொதுமக்கள் முக்கிய சந்திகளில் படையினரால் தடுத்துவைக்கப்பட்டிருந்ததையும் காணமுடிந்தது,

ஊரடங்கு உத்தரவுக்கான காரணம் செய்தி எழுதப்படும்வரை தெரியவரவில்லை. (இ10)

## பணயக் கைதிகளை விடுவிப்பது குறித்து பேச்சு

பணயக்கைதிகளை விடுவிப்பதுபற்றி கூலிப் படையினருடன் இன்னும் பேச்சுக்கள் நடத்தப்பட்டு வருவதாக மாலைதீவில் உள்ள இந்தியத் தூதர் ஏ. கே பானர்ஜி தெரிவித்தார்.

பணயக் கைதிகளுடன் சென்றுகொண்டிருந்த கூலிப்படையினரின் இரண்டாவது படகை இந்தியாவின் இரண்டு யுத்தக் கப்பல்கள் துரத்திச் சென்று சுற்றி வளைத்தன. ஆனால் அப்படகைக் கைப்பற்றவில்லை என்று திரு பனர்ஜி சொன்னார்:

முன்னர் வந்த செய்தி ஒன்று படகு இந்தியப்படையினரால் கைப்பற்றப்பட்டது எனவும் பணயக்கைதிகள் மீட்கப்பட்டனர் என்றும் தெரிவித்தது

ஆனால் அப்படி ஒன்றும் நடக்கவில்லை என்று இந்திய வானொலி நேற்று இரவு அறிவித்தது (ஒ-எ)

## சட்ட நடவடிக்கை எடுக்க நேரிடும் என்கிறார் முன்னாள் ஜனாதிபதி நாஸிர்

சிங்கப்பூர், நவம்பர் 6
மாலைதீவில் தோல்வியில் முடிவடைந்த புரட்சியுடன் தன்னை சம்பந்தப்படுத்திப் பேசுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்போவதாக மாலைதீவு முன்னாள் ஜனாதிபதிஇப்ராஹீம் நஸிர் தெரிவித்தார்.

21 ஆண்டுகள் மாலைதீவின் அரசுத் தலைவராக இருந்த இப்ராஹீம் நாஸிர் 1978 ஆம் ஆண்டில் பதவியை இராஜினாமா செய்துவிட்டு சிங்கப்பூருக்குச் சென்றார். (ஒ எ)

ஆகப் பிந்திய செய்தி:

## படகை தகர்க்க போவதாக கூலிப்படை எச்சரிக்கை

பணயக் கைதிகளுடன் சென்று கொண்டிருக்கும் கூலிப்படையினரின் படகை இந்திய யுத்தக் கப்பல்கள் மிக அண்மையில் நெருங்கி விட்டதாக ஆகப் பிந்திக் கிடைத்த செய்திகள் தெரிவித்தன

படகை கைப்பற்ற முற்பட்டால், பணயக் கைதிகளுடன் படகை குண்டு வைத்து தகர்த்து விடப்போவதாக கூலிப்படையினர் எச்சரிக்கை விடுத்தனர். (ஒ)

தமிழ் அகதிகள் குறித்து

## தொண்டமான் ஜேர்மன் வரும்போது பேச்சுக்கள் நடத்துவேன்

### ஜேர்மன் அமைச்சர் சொல்கிறார்

கொழும்பு, நவ 6
ஆண்டு இறுதியில் அமைச்சர் தொண்டமான் மேற்கு ஜேர்மனிக்கு வருவார். அப்போது இலங்கைத்தமிழ் அகதிகள் பிரச்சினை பற்றி அவருடன் நான் பேசுவேன்.

மேற்கு ஜேர்மன் பொருளாதாரக் கூட்டுறவு அமைச்சர் ஹான்ஸ் கிளின் முன்கண்டவாறு தெரிவித்தார்.

கொழும்பில் நடந்த செய்தியாளர் மாநாடு ஒன்றில் மேற்கு ஜேர்மனி அமைச்சர் பேசினார்.

இலங்கைத் தமிழர்ல் பெரும் பான்மையினரின் நலன்களை திரு. தொண்டமான் போதுமான அளவு பிரதிநிதிப்படுத்தக் கூடியவர் என்று நான் கருதுகிறேன் என்றும் மேற்கு ஜேர்மன் அமைச்சர் கூறினார்

செய்தியாளர்களின் கேள்விகளுக்கு அவர் பதில் அளித்தார்.

கேள்விகள்: மேற்கு ஜேர்மனியில் தங்கி உள்ள இலங்கைத் தமிழ் அகதிகளை திருப்பி அனுப்பக் கூடிய நிலை இலங்கையில் தற்சமயம் நிலவுகிறது என்று கருதுகிறீர்களா?

அமைச்சர் கிளீன்: இது பற்றி திடமான ஒரு முடிவை எடுக்கக் கூடிய கால அவகாசம் இந்த விஜயத்தின் போது எனக்குக் கிடைக்கவில்லை

மேலை நாட்டுப்பத்திரி (6 ஆம் பக்கம் பார்க்க)

### சுபநேரம்

06 - 11 - 1988
ஐப்பசி 21
ஞாயிற்றுக்கிழமை
சுபநேரம்:-
9-05முதல் 10-35வரை
ராகுகாலம்:-
09-35முதல் 06-05 வரை
பிரதோஷ விரதம்

## ரூ. 1,000 நிவாரணம் நேற்று வெளியான பட்டியல்

யாழ்ப்பாணம், நவ 6
மீளக் குடியமர்தல் நிவாரணமாக ஆயிரம் ரூபா பெறும் குடும்பங்களின் மற்றுமொருபட்டியல் யாழ். செயலகத்தினால் நேற்று வெளியிடப்பட்டது.

உரும்பராய் கிழக்கில் நூற்றுப் பத்துக்குடும்பங்களும், கோப்பாய் ஊரெழுவில், இருபத்தியேழு குடும்பங்களும் அச்சுவேலி தெற்கில், நாற்பத்திஇரண்டு குடும்பங்களும் உருப்பராய் மேற்கில, ஏழுகுடும்பங்களும் இந்தப் பட்டியலில் இடம் பெற்றன.

இலங்கை வங்கியின் ஆஸ்பத்திரி வீதிக் கிளையினூடாக இவர்களுக்கான கொடுப்பனவுகள் (6 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

வீடியோ ஹமரா மொடல் GXN70E Title Model விற்பனைக்குண்டு. தொடர்பு:- 13/1, நீல் வீடியோ சென்ரர், ஈச்ச மோட்டை, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (7905)

தளபாடங்கள். குளிர்சாதனப்பெட்டி. ஹோல் செற் Fan, விறாந்தை செற் கட்டில் மெத்தை கண்ணாடி மேசை, சசற் றேடியோ, சாப்பாட்டு மேசை செற்றி. குசன்கள் மற்றும் பல உடன் மலிவு விலையில் விற்பனைக்கு உண்டு No 7, பண்டாரக்குளம் மேற்கு வீதி, நல்லூர் வடக்கு. யாழ்ப்பாணம். (7139)

பாவித்த வீட்டுத் தளபாடங்கள் Show – case கட்டில், கதிரைகள், ஹோல் செற், கபேட், கண்ணாடி மேசை, தேசறி தளபாடம், சாப்பாட்டு மேசை கதிரைகள், எக்கோடியன் Grinder Fan, மெலே டிக்கா கிளாஸ், பித்தளைப் பொருள்களும் உடன் மலிவு விலையில் விற்பனைக்கு உண்டு. D K. சபாரத்தினம், 35/1 ஃக்கா லேன், யாழ்ப்பாணம். (7 38)

## விற்பனைக்கு

ஆடுக் கடாக்கள் விற்பனைக்கு உண்டு தொடர்பு: உதயா விறகு மரக்காலை 439, இராமலிங்கம் வீதி திருநெல்வேலி கிழக்கு. யாழ்ப்பாணம். (7733)

இந்துநாகரிகத்தில் க.பொ.த A/L, G A Q இராமநாதன் நுண்கலைப் பிரிவு தேவைக்கான துணைநூல் விலை 19 50 கிடைக்குமிடம்: பூபாலசிங்கம், ஸ்ரீலங்கா புத்தகசாலைகள். (7923)

Junior English Compositions – ஆங்கிலத்தில கட்டுரை, கடிதம். உரையாடல் எழுதுவதற்கு இன்றியமையாத வழிகாட்டி நூல் ஆக்கியோன் K M Selvaratnam, B A (Hons) விலை 9 50 பூபாலசிங்கம், ஸ்ரீலங்கா புத்தசாலைகளில் கிடைக்கும். (7922)

இறைச்சிக்கோழி. விருத்துக்குஞ்சு, கோழி முட்டை, கோழித்தீன் வகை தொகையாகவும் சில்லறையாகவும் சகாய விலையில எப்போதும் பெற்றுக்கொள்ளலாம். பம்ஹவுஸ் கோட் ரோட், பல்லாலம். (7921)

## தேவை

யாழ் நகரில் ஒரு வீடு வாடகைக்கு தேவை. மேல்மாடி வீடுகளும் விரும்பப்படும். முழு விபரங்களுடன் எழுதவும் தொடர்பு; 355, மே/பா, உதயன் யாழ்ப்பாணம். (7915)

## A/L 90 இரசாயனம்

108 Brown Road. A/L 90 பொது இரசாயனம் ஆசிரியர் சதீஸ். ஆரம்பம் 7-11-88 திங்கள் 4 30 p m திங்கள், புதன் 4.30 to 6 00 p.m (7914)

## தேவை

பிளாஸ்ரிக்போட் வேலை பழகுவதற்கும். றபர்சீல் வேலைகள் மற்றும் ஓவிய வேலைகள் செய்ய ஆர்வமுள்ள யுவன் யுவதிகள் தேவை நற்சான்றிதழ்களுடன் 10 - 11 - 88 க்கு முன் நேரிலோ கடிதமூலமோ விண்ணப்பிக்கவும். மாநகர சபை எல்லைக்குள் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது. சரன் ஸ்ருடியோ 9,8, நவீன சந்தை மேல்மாடி, யாழ்ப்பாணம். போன் 23858 (7918)

கொப்பிகள் கட்டுவதற்கு பெண் பிள்ளைகள் தேவை. அண்மையில் உள்ளவர்களுக்கும், கஷ்டமான குடும்பத்தில இருந்து வருபவருக்கும் முன்னுரிமை வழங்கப்படும் மில்க் இன்டஸ்ரீஸ் (Milk Industries), 26 26/1 திருநெல்வேலி (சிவன்) புது வீதி, யாழ்ப்பாணம். (7642)

## தீபாவளி பிறந்தநாள் வாழ்த்து மடல்கள்

திருமண அழைப்பிதழ்கள், (Printing Cards), திருமண வாழ்த்துகள், பிறந்தநாள் வாழ்த்துக்கள், தீபாவளி, நத்தார் புதுவருட வாழ்த்துக்கள் மற்றும் ஏனைய வாழ்த்து மடல்களையும் மொத்தமாகவும் (விசேடகழிவுண்டு; சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். அரசன் ஜவுளியகம் 146, நவீன சந்தை. யாழ்ப்பாணம். (C 357)

## மலிவு விற்பனை

மற்றும் புதிய டிசைன்களில் உருவான தீபாவளி வாழ்த்து மடல் குறைந்த விலையில் விற்பனைக்கு உண்டு. வியாபாரிகளுக்கு விசேட கழிவு. பார்வையிடவும் கொள்வனவு செய்யவும் மங்கிலன் புத்தகசாலை, ஆஸ்பத்திரி வீதி. பஸ் நிலையம். யாழ்ப்பாணம். (7601)

## கஸட் மூலம் ஆங்கிலம் பேசசு பயிற்சி

Spoken English, ஆங்கிலம் இலகுவாக விரைவில் பேசிக்கொள்ள நீங்கள் கசட்களைப் பெற்றுக்கொள்ள வேண்டிய முகவரி Spencer, அரிப லொஜ், மானிப்பாய் றோட் உடுவில். (7917)

## மணமகன் தேவை

28 வயது இந்து வேளாள குலத்தைச் சேர்ந்த பட்டதாரி ஆசிரியைக்கு மணமகன் தேவை. செவ்வாய்க் குற்றமில்லை சீதனம் பேசித் தீர்மானிக்கப்படும் சாதகக் குறிப்புடன் தொடர்புகொள்க, தொடர்பு:- 344 C/O Uthayan, Jaffna. (7906)

## வேலை தேவை

Parts I – IV I C.M A தேறிய கணக்காளர் தொழில் தேடுகின்றார். வயது 46. U K இல் தொழில் பார்த்து இங்கும் கணக்காளராக தொழில் ஆற்றியவர். விரும்புவர்கள் விண்ணபிக்கவும். விளம்பர இல 7, C/o உதயன் யாழ்ப்பாணம். (7731)

## நாய்க் குட்டி விற்பனை

அழகிய உயர்ந்த சாதி சகல தடுப்பூசிகள் ஏற்றிய இரண்டு வயது பிறவுன் போமனேரியன் ஆண் நாய் ஒன்றும் அதே இன 2மாத வயதுள்ள பூசி மருந்து கொடுக்கப்பட்ட ஆண் நாய்க் குட்டி ஒன்றும் விற்பனைக்குண்டு. அ. அரசகுலசேகரன், டச்சு வீதி, சங்குவேலி. (7920)

## கோழிக் குஞ்சு விநியோகம்

Christumpu Farm ஒருநாள் Golden Comet பிறவுன் பேட்டுக் குஞ்சுகள் எமது ஸ்தாபனத்தில 10- 11- 88 அன்று விற்கப்படும். முன்கூட்டியே பதிவு செய்ய விரும்புபவர்கள் சுஜேராஸ், 21, வேம்படி வீதியில் உள்ள எமது காரியாலயத்தில் பதிவு செய்யலாம். முற்பணம் எதுவும் அறவிடப்படமாட்டாது. தொகையாக வாங்குபவர்களுக்கு விசேஷ சலுகை வழங்கப்படும். C/672)

## ஜோதிடம்

வெளிவந்து விட்டது. சனிமாற்றம் (05-11-88) தமிழர்களுக்கு மறுமலர்ச்சியும், தென்னிலங்கையின் கும்பராசிக்கு சனிபார்வையால் இரத்தக்களரிகளையும் ஏற்படுத்தும் எல்லா இராசிகளுக்கும் பதிப்பாசிரியை R. சத்தியநாதன் B A (Cey) எங்கும் கிடைக்கும ரூ 3 50 விநியோகத்தர்கள் பூபாலசிங்கம் புத்தகசாலை யாழ்ப்பாணம். (7924)

## சேவை

தமிழ், ஆங்கில தட்டச்சு வேலைகளை சிறந்த முறையில் குறித்த தவணையில் பெற்றுக்கொள்ளவும். எலெக்ரோனிக் ரைப்பிங் மூலம் வெளிநாட்டுக்கடிதங்கள் Bio-Data போன்ற முக்கிய பிரதிகள் கண்ணைக் கவரக்கூடிய ஆங்கில எழுத்துக்கள் மூலம் செய்து கொடுக்கப்படும். 'ஷப்ரு' சேவைப் பிரிவு. இல. 19, 2ஆம் ஒழுங்கை, மின்சார நிலையவீதி, யாழ்ப்பாணம். (C/691)

## ரோணியோ

தரமான ரோணியோ பிரதிகளை (தமிழ்/ஆங்கிலம்) சிறந்த முறையில் குறித்த தவணையில் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம் "ஷப்ரு" சேவைப் பிரிவு, இல: 19, 2ஆம் ஒழுங்கை மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம் (C/69?)

## இறைச்சிக் கோழி விநியோகம்

Broiler இறைச்சிக் கோழிகள், பேட்டுக் கோழிகள், சேவற்கோழிகள். சூப் குஞ்சுகள், விருத்துக் குஞ்சுகள் என்பன குறைந்த விலையில் எப்பொழுதும் பெற்றுக் கொள்ளலாம். சுகாதார முறைப்படி சுத்தம் செய்து கொடுக்கப்படும் Nallur Farm Centre C/o நல்லூர் வீடியோ சென்ரர் 19. முருகேசர் ஒழுங்கை, நல்லூர். (7685)

## விசேட பயிற்சி வகுப்புக்கள்

Radio. T. V , Deck, வயறிங், பிளம்பிங், குளிர்சாதனவியல் (A/C) றீவைண்டிங், வெல்டிங், மோட்டோ மெக்கானிசம், கட்டடப் படம் வரைதல் ஆகிய வகுப்புக்கள் நடைபெறுகின்றன. தொடர்பு;- N sta Techn'cal Institute, 59, Station Road, Jaffna (சான்றிதழ்களும் வழங்கப்படும்.) (7672)

## தீபாவளி மலிவு விற்பனை

அரிய சந்தர்ப்பம்! தவற விடாதீர்கள்!! (1-11-88 முதல் 9-11-88 வரை) புதிய டிசைன் ஸ்கேட், பிளவுஸ், பேபி சூட், கவுண்கள், பெரியோர், சிறுவர்களுக்குரிய ரெடிமேட் ஆடைகள் Fashion Garments, 2? 22 கடைச்சாமி வீதி. (Off Navalar Road) நீராவியடி, யாழ்ப்பாணம். (7716)

## சமூகக்கல்விப் பயிற்சிகள்

ஆண்டு 11, 10 9, 8, 7. 6 வகுப்புகளுக்குரிய சமூகக்கல்விப் பயிற்சிகள் - வினா விடைகள் - வெளிவந்து விட்டன. ஆக்கியோன்: க. குணராசா– எம் ஏ. விற்பனையாளர்: ஸ்ரீலங்கா புத்தகசாலை, பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். (7715)

## கோழிக்குஞ்சுவிநியோகம்

Nallur Farm Centre Prima Lohman வெள்ளை, சிவப்புப் பேட்டுக்குஞ்சுகள், சிவப்பு சேவற்குஞ்சுகள், Broiler குஞ்சுகள், Golden Comet. சிவப்பு பேட்டுக்குஞ்சுகள் Hy-line கறுப்பு, வெள்ளை Silver பேட்டுக்குஞ்சுகள் ஒவ்வொரு புதன் கிழமைகளிலும் விநியோகிக்கப்படும். 25குஞ்சுகளுக்கு மேல் கொள்வனவு செய்வோருக்குப் படிப்படியாக விலையில் சலுகை உண்டு. C/o நல்லூர் வீடியோ சென்ரர். 19. முருகேசர் ஒழுங்கை, நல்லூர். (7686)

# ★ ஓராண்டு நினைவஞ்சலி ★ திதி: 06-11-1988





**சி சோக்கலிங்கம்**

தோற்றம்: 14 - 3 - 1907
மறைவு: 19 - 10 - 1987

**திருமதி சோ. இராசம்மா**

தோற்றம்: 14 - 2 - 1923
மறைவு: 19 - 10 - 1987

எங்கள் எல்லோருக்கும் வளமான வாழ்வளித்து
எமக்கு நல்வழிகாட்டி அன்பு நெறி நின்று
அயராது உழைத்த அன்புத் தெய்வங்களே
நீங்கள் இருவரும் பின்னி இருக்க விடாது
து பாக்கிக் குண்டு - எனால் பறித்தானே!
உங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

உங்கள் பிரிவால் துயருறும்
பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

சோமசுந்தரம் வீதி,
ஆனைக்கோட்டை.



(7736)



செல்வன்
**துரைஐயா பாலச்சந்திரன்**
(சந்திரன்)
(கமலா ஸ்ரோஸ் உரிமையாளரின் மகன்)

மலர்வு: 12 – 7 – 1959
உதிர்வு: 19 – 10 – 1987

வர்த்தகப் பெருமகனும் சொல்லின் செல்வனும் செயற்கரியன செய்து உன் சிரித்த முகத்தாலும் சீரிய பண்பாலும் எம் இதயம் கவர்ந்த செல்வமே! எங்கே சென்று மறைந்தாயோ! எங்கள் குணமணியே இரக்கமின்றி உன்னைக்காலனுக்கு இரையாக்கினரே! வான் மதியழிந்திட்டாலும் எம் மதியே உம் நினைவு எம் நெஞ்சை விட்டகல என்றுமே முடியபனையா! சிந்திக்கும் போதுதானும் எம் சிந்தையே கலங்குதையா! எம் தோட்டத்து ரோஜாக்களே இனி யாருக்காக மலர்வீர்கள் சாலைகளே இனி யார் வருகைக்காக காத்திருப்பீர். நேசிக்கும் நெஞ்சங்கள் என்றும் உங்களை இறக்க விட்டதில்லையே ஓராண்டு காலமாக உங்களை நினைத்து வாடும்:

உங்கள் பிரிவால் துயருறும்:
அப்பா, அம்மா, தம்பிமார்,
தங்கைமார், மாமாமார்,
மாமிமார் மைத்துனர்மார்,
மைத்துனிமார் மருமகன்,
உடன் பிறவா சகோதரர்கள்,
நண்பர்கள்.



**திரு. சு. சத்திவேல்**
(சத்தி)

படைப்பு: 01 – 12 – 1960
அழிப்பு: 19 – 10 – 1987

அன்பாலும் பண்பாலும் பாசத்தாலும் எங்களை வழி நடத்தி இரண்டாண்டுகள் மண வாழ்க்கையிலே அமல்ராஜ் தன்னைப் பெற்று ஒரு மாதம் தன்னில் வந்த காலனே எங்கள் அன்புத் தெய்வத்தின் உயிரை பறித்துக் கொண்டதோ? மாலையில் வாங்கிய மாலைகள் காலையில் பார்த்தால் மலர் வளையங்கள் ஆகிவிட்டனவே! காலடிச் சுவடுகள் அழிந்துவிடும் காலச் சுவடுகள் என்றுமே அழிவதில்லையே. கண்ணுக்குள் ஊசலாடும் உன் உருவம் காணாமல் கலங்குகின்றோம் நாங்களெல்லாம்.

உமது பிரிவால் துயருறும் :

மனைவி மகன். (அமல்ராஜ்),
தாய் தம்பி. அக்கா தங்கை,
மாமா, மாமி, மருமகன்மார்,
மச்சான்மார் மச்சாள்மார்,
நண்பர்கள்.

சந்திரபவனம், சங்கரப்பிள்ளை வீதி. ஆனைக்கோட்டை.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**சுப்பையா சோதிலிங்கம்**

ஆண்டவன் படைப்பு: 03 - 09 - 1955
அமரத்துவத்தின் அழைப்பு: 19 - 10 - 1987

திதி: 06 - 1? - 1988

மண்ணிலே மாண்புடைக் கோவையின்
ஜோதியே!
எண்ணிலாப் புகழுடன்
வாழ்ந்து வந்திரே
கண்ணிலே இமையைபபோல்
எம்மை நீர் காத்திட்டு
விண்ணிலே சேர்ந்திர் விடிவிலோம் நாமும்
காவிடம் படைத்து நீர்
ஜீவியம் நடத்திட
பாவியாம் வடிவில் காலனும் வந்துன்
ஆவியைப் பறித்ததைக் கேட்டுத்
துடிக்கிறோம்
கூவிப் புலம்பிக் கதறி நிற்கின்றோம்.
உங்கள் ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி –சோதிலிங்கம் வசந்தமலர்;
மகள் – தட்சாஜினி ஹர்சியா.
தாய் மாமா. மாமி. சகோதரர்கள்,
மைத்துனிமார் மச்சான் மற்றும்,
உறவினர். நண்பர்கள்,

களம்புரை,
கோப்பாய், வடக்கு. (7740)

# ஓராண்டு நினைவு அஞ்சலி



**தம்பிப்பிள்ளை சிவநாதன்**

தோற்றம்: 9 - 4 - 1959
அழிப்பு: 9 - 11 - 1987

என் ஆருயிர் அன்புத் தெய்வமே
வளமான வாழ்வை விரும்பி திரைகடல்
ஓடியும் திரவியம் தேடு என்னும் முதுமொழிக்
கொப்ப எமது நாட்டை விட்டு ஒல்லாந்து
தேசத்தினை சென்றனையை சென்றஇடத்தில்
வாகன மூலம் காலன் கவர்ந்தானே உன்
உயிரை. உன் அருமைப்
புதல்வன் சேதீஸ்வரன்
அப்பா எங்கம்மா என்று கேட்கும் போது
செய்வது அறியாது திகைக்கின்றேன்.
உங்கள் ஆத்மா சாந்தி அடைய
இறைவனைத் துதிக்கின்றோம்.
உங்கள் பிரிவால் வாடும்:
மனைவி. பிள்ளை (சேதீஸ்) தாய். தந்தை
(7737)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மானிப்பாய் கோவில்பற்று ப. நோ. கூ. சங்கம்

**நுகர்ச்சிப்பொருள், மற்றும் கால் நடை கோழித்தீன் வகைகள், புடைவை வகைகள் வழங்குனர்களைப் பதிவு செய்தல்.**

மேற்படி சங்கத்திற்கு வாராந்தம் தேவைப்படும் தரமான நுகர்ச்சிப் பொருள்கள், கால் நடை, கோழித்தீன், புடைவை வகைகளை மொத்தமாக வழங்கக்கூடிய பலசரக்கு வியாபார ஸ்தாபனங்கள், புடைவை வியாபார ஸ்தாபனங்களிடமிருந்து பதிவு செய்வதற்கு மனுக்கள் 14-11-88 திங்கட்கிழமை வரை எம்மால் ஏற்றுக்கொள்ளப்படும்.

பதிவுசெய்ய விரும்பும் ஸ்தாபனங்கள் தங்கள் பெயர் விலாசங்களை அனுப்புவதோடு பிரதி திங்கட்கிழமை பிற்பகலுக்கு முன் சங்கக் காரியாலயத்தில் கிடைக்கக்கூடியதாக தங்கள் ஸ்தாபனத்தால் வழங்கக்கூடிய பொருள்களின் விபரம், விலை, தொகை ஆகியவற்றை குறிப்பிட்டு கேள்விக்கூற்று அனுப்பி வைக்க வேண்டும்.

பதிவு செய்வதற்கு எவ்வித பணமும் அறவிடப்படமாட்டாது.

கிடைக்கும் கேள்விக்கூற்றுக்களை அடிப்படையாக வைத்து கொள்வனவுக் கட்டளைகள் வழங்கப்படும். மேற்கொண்டு விபரங்கள் தேவைப்படின் சங்கக் காரியாலயத்தில் தொடர்பு கொள்ளலாம்.

C-445 பொதுமுகாமையாளர்

# BECON

156/3, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

## A/L 90

## கலை, வர்த்தகம் பிரிவு 3

| | |
|---|---|
| பொருளியல் | :- வரதராஜன் |
| அளவையியல் | :- S. S. மனோகரன் |
| வர்த்தகம் | :- ரட்ணம் |
| கணக்கியல் | :- மரியதாஸ் |
| இந்துநாகரிகம் | :- ஜோதிலவரன் |
| தமிழ் | :- செல்வி மீரா |
| புவியியல் | :- இக்னேசியஸ் |
| அரசியல் | :- சுந்தரமூர்த்தி |

**ஆரம்பம்:**
**12-11-1988**
**சனி- 9. 00 a.m**

(C 741)

## Nallur Pradeshiya Sabha,

Thirunelvely, Jaffna.

## Registration of Suppliers & Contractors - 1989

Applications are invited up to 30th November, 1988 from reputed Suppliers/ Manufacturers / Local Agents/Contractors, who wish to register themselves for the under mentioned Supplies & Services.

(1) Stationery
(2) Electricity Materials
(3) All Types of Hardware Materials
(4) Brooms, Ekel Brooms & other Sanitation Materials
(5) Printing Services
(6) Repairing Office Equipments.

All applications should accompany a Cheque for Rs. 25/- being registration fee drawn in favour of Special Commissioner, Nallur Pradeshiya Sabha and addressed to the Special Commissioner, Nallur Pradeshiya Sabha, Thirunelvely, Jaffna.

Quotations will be called only from the registered suppliers. However the Special Commissioner reserves the right to call for Quotation from other sources as well in order to obtain quality goods at competitive prices.

**K. SHANMUGANATHAN**
Special Commissioner,
Nallur Pradeshiya Sabha.

(C 738)

## கொம்பியூட்டர் பயிற்சி

**Diploma in Computer Programming**

Course இற்கான புதிய பிரிவுகள்:
சனி/ ஞாயிறு நாட்களில் ஆரம்பமாகின்றன

★ விரும்புவோர் விண்ணப்பங்களைப் பெற்று Rs 400/-செலுத்தி பெயர்களைப் பதிவு செய்யலாம்

IDP 342 K. K. S Road,
(சிவன் கோயிலடி),
யாழ்ப்பாணம். (7867)

## GENERAL NOTICE

I, M. J. Ratnaraja of Uduvil Road, Manipay do hereby inform the general Public and whom it may concern that neither I nor the Board of Directors of "ELIM" Childrens and Voluntary Home Memorial Lane, Manipay have handed over the home to anyone, anybody or any Organisation.

M. J. RATNARAJA
(7729)

## யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

# கேள்வி அறிவித்தல்

இதன் கீழ் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையங்கள் உட்பட்ட சந்தைகள், இறைச்சிக்கடைகள், கோழிக்கடைகள், சந்தைக்கடைகள் ஆகியவற்றை அவ்வட்டவணையில் குறிப்பிடப்படும் காலங்களுக்கு 01. 01. 1989 ஆம் திகதி முதல் குத்தகைக்குக் கொடுப்பதற்கென அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற ஆணையாளரால் 21. 11. 1988 ஆம் திகதி திங்கட்கிழமை நண்பகல் 12. 00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விகள் குறித்த அட்டவணையில் குறிப்பிட்டுள்ள கேள்விப் பிணையும், கேள்விப் படிவக்கட்டணம் ரூபா .50/- வும் செலுத்துவதன் பேரில் 18. 11. 1988 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3. 00 மணிவரையும் யாழ் மாநகராட்சி மன்றத்தில் வழங்கப்படும் உத்தியோகபூர்வமான படிவங்களில் இணைப்பிரதிகளில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். கேள்விப்படிவங்கள் யாழ் மாநகராட்சி மன்றத்தில் இதற்கென வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். அல்லது பதிவுத்தபால் மூலம் யாழ் மாநகராட்சி மன்ற ஆணையாளருக்கு 21. 11. 1988 ஆம் திகதி நண்பகல் 12. 00 மணிக்குப் பிந்தாமல் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படல் வேண்டும்.

இக்கேள்விகள் சம்பந்தமான மேலதிக விபரங்களை மாநகராட்சி மன்ற அலுவலகத்தின் நானாவித இறைவரிக்கிளையில அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

க. தர்மலிங்கம்,
மாநகர ஆணையாளருக்காக
யாழ்ப்பாணம்.

மாநகராட்சி மன்ற அலுவலகம்,
யாழ்ப்பாணம். 4. 11. 1988.

**அட்டவணை**

| குத்தகை விபரம் | குத்தகை காலம் | கேள்வி பிணை | நிர்ணயிக்கப்பட்ட ஆகக் குறைந்தகேள்வித் தொகை |
|---|---|---|---|
| 1. பெரியகடை மரக்கறி சந்தை | 1 வருடம் | 2000/- | 234, 000. 00 |
| 2. குருநகர் சந்தை | 1 வருடம் | 2000/- | 465, 000. 00 |
| 3. செங்குந்தா சந்தை | 1 வருடம் | 2000/- | 270, 000. 00 |
| 4. நாவாந்துறை சந்தை | 1 வருடம் | 2000/- | 70, 000. 00 |
| 5. பாசையூர் சந்தை | 1 வருடம் | 2000/- | 60, 000. 00 |
| 6. கொட்டடி சந்தை | 1 வருடம் | 2009/- | 9, 000. 00 |
| 7. அரியாலை சந்தை | 1 வருடம் | 2000/- | 9, 000. 00 |
| 8. கொழும்புத்துறை சந்தை | 1 வருடம் | 500/- | 2, 000. 00 |
| **சந்தை கடைகள் (நாவாந்துறை சந்தை)** | | | |
| 9. கடை இல 11: மீன்: இறைச்சி பாதுகாக்கும் குளிர்சாதனக்கடை | 5 வருடம் | 2500/- | 10, 000. 00 |
| 10. கடை இல 12 மீன் இறைச்சி பாதுகாக்கும் குளிர்சாதனக்கடை | 5 வருடம் | 2500/- | 10 000 00 |
| 11. கடை இல 13 கருவாட்டுக் கடை | 5 வருடம் | 2000/- | 5: 000: 00 |
| **இறைச்சிக் கடைகள்** | | | |
| கொட்டடி ஆட்டிறைச்சிக் கடைகள் கடை இல. 2 | 1 வருடம் | 2500/- | 5, 300. 00 |
| கடை இல. 1- 11 வரை | 1 வருடம் | 2500/- | 2: 000: 00 |
| நாவாந்துறை மாட்டிறைச்சிக் கடைகள் கடை இல 6 | 1 வருடம் | 2500/- | 3, 300. 00 |
| கடை இல. 1 - 5, 7 வரை | 1 வருடம் | 2500/- | 6, 000. 00 |
| நாவாந்துறை ஆட்டிறைச்சிக் கடை இல. 8, 9 | 1 வருடம் | 1500/- | 1, 500. 00 |
| நாவாந்துறை கோழிக்கடை கடை இல 10 | 1 வருடம் | 1500/- | 1, 500. 00 |
| குருநகர் மாட்டிறைச்சிக்கடைகள் கடை இல: 1 - 6 வரை | 1 வருடம் | 2500/- | 4, 000. 00 |
| ஆட்டிறைச்சிக்கடை இல. 7 | 1 வருடம் | 2500/- | 4, 000. 00 |
| பாசையூர் மாட்டிறைச்சிக் கடைகள் கடை இல. 1 | 1 வருடம் | 2500/- | 15, 000. 00 |
| கடை இல 3 | 1 வருடம் | 2500/- | 3, 000. 00 |
| நரிக்குண்டு மாட்டிறைச்சிக்கடை | 1 வருடம் | 2500/- | 2. 500. 00 |
| அரியாலை மாட்டிறைச்சிக் கடை | 1 வருடம் | 2500/- | 3, 500. 00 |
| அரியாலை ஆட்டிறைச்சிக் கடை | 1 வருடம் | 1500/- | 1, 500. 00 |
| முஸ்லிம் கல்லூரி வீதி ஆட்டிறைச்சிக் கடை | 1 வருடம் | 2500/- | 1, 500. 00 |
| ஜின்னா வீதி ஆட்டிறைச்சிக் கடை | 1 வருடம் | 2500/- | 1, 500. 00 |
| செங்குந்தா சந்தை ஆட்டிறைச்சிக் கடை | 1 வருடம் | 3000/- | 8, 000. 00 |

(C/740)

'செந்தமிழ் நாட்டினில் முந்தி முந்தி வந்த சித்திரக் கலண்டரேது?
என்றும் மந்திரத் திங்குறள் ஏந்திவரும் நல்ல மெய்கண்டான் கலண்டரது
உங்கள் வாழ்வின் விளக்கமது!"

## இப்போதே விற்பனையாகிறது!

**மங்களகரமான 1989 ஆம் ஆண்டு புது வருடத்துக்கான**

# மெய்கண்டான் கலண்டர்கள்

"இல்லங்கள் தோறும் ஒளிபரப்பும் ஏந்திய தீபமேது—என்றும்
நல்லவர் உள்ளத்தைக் கொள்ளைகொள்ளும் குறள் மெய்கண்டான் கலண்டரது
ஒரு ஞானப்பரிதியது"

## மெய்கண்டான் டயறிகள்

கண்ணையும் கருத்தையும் கவரும் வண்ணம் அழகாக உருவானவை.

சிறிய பொக்கற் அளவு முதல் பெரிய டெஸ்க் அளவு வரை
கண்கவர் அச்சுக்கலை நுணுக்கத்துடன்
பல வண்ணப் பிளாஸ்ரிக் பேர்ஸ் கவர்கள் கொண்டவை.

## மெய்கண்டான் கலண்டர்கள் டயறிகள்

● அற்புதமானவை ● அழகானவை ● தரமானவை

**தற்போதே வெளிவந்துவிட்டன!**

விற்பனையாளர்களின் வசதிகருதி முன்கூட்டியே பெற்றுக்கொள்ள எமது கிளை நிறுவனத்தை நாடுங்கள்.

**விற்பனையாளர்கட்கு விசேட கழிவுண்டு.**

விபரங்கட்குத் தொடர்பு கொள்ளுங்கள்!

# மெய்கண்டான்

## அச்சகம் லிமிட்டெட்

**144, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.**

(C 734)

## 2ஆவது பிறந்தநின வாழ்த்து



## பேபி சுயேந்தி

(வேணு)

சங்கானை காளிகோயிலடியைச் சேர்ந்த ரவீந்திரன் - தில்லைராணி தம்பதிகளின் செல்வப்புதல்வி வேணு தனது இரண்டாவது பிறந்தநாளை இன்று (06 - 10 - 88) ஞாயிற்றுக்கிழமை பெற்றோருடன் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார். இவரை அப்பப்பா, அப்பம்மா, அத்தைமார், மச்சாள், சித்தப்பா [டென்மார்க்], ஆச்சி, பெரியம்மா, அக்காமார், அண்ணாமார், மச்சாள் மச்சான்மார், மாமாமார், மாமிமார், பெரியமாமா அனைவரும் இவரை காளி அம்பாள் அருள்பெற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகிறார்கள். (7892)

## KEEN CENTRE
## திருநெல்வேலி

## A/L 90

**கலை, வர்த்தகம்**
**புதிய பிரிவு 2**

| | |
|---|---|
| பொருளியல்:- | திரு. வரதராஜன் |
| அளவையியல் :- | திரு S. S. மனோகரன் |
| வர்த்தகம்:- | திரு: ஜெயராமன் |
| கணக்கியல்:- | திரு. சௌந்தி |
| தமிழ்:- | திரு. குழந்தை |
| இ. நாகரிகம்:- | திரு. காரை சுந்தரம்பிள்ளை |
| அரசியல்:- | திரு. சுந்தரமூர்த்தி |

**ஆரம்பம்:**
07. 11. 88 மாலை 4-30 p.m
(7891)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓராண்டு நினைவஞ்சலி



### வேலுப்பிள்ளை மதியாபரணம்
(மகேசன)

படைப்பு: 30 - 1 - 1938 அழிப்பு: 19 - 10 - 1987

**திதி: 06- 11- 1988**

இன்மாமும் இனிய புன்சிரிப்பும்
இன்செயலும் உமை எம்மனதே
நிறைந்திருக்க
மதி மிகு தில்லைக் கூத்தன்
மகேசன் அவன்றனக்கு
ஆபரணமாய் பூண அழைத்தானோ நின்னை

தமிழ்த்தாயின் வாழ்வுக்காய்
ஓய்வின்றி எரியும் வேள்வித்தீயில்-உன்
குருதி நெய் சொரிந்து நின்றன்
தமிழ் மண்ணை விட்டு தலைவன் தாள்
சேர்ந்தனையோ

மண்ணுலகிற்கு அளித்திட்ட விமலன் அவன்
விண்ணிலிருந்து அழைத்திட உன்றன்
கண்பார்வை விமலாதனை விடுத்தேகினையோ
புண்ணியம் பெறுக நின் ஆத்மா!

மனைவி, மாமி, சகோதரர்,
மைத்துனர், மைத்துனி, மருமக்கள்,
பெருமக்கள், உற்றார், உறவினர்.

வயாவிளான் தெற்கு,
வயாவிளான் (7723)

## முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி



### திரு. சுப்பையா நவரட்ணம்
(பாப்பா)
(ஓய்வு பெற்ற சிருப்பர்,
நீர்ப்பாசன இலாகா, கல்கமுவ)

தோற்றம்: 25- 06- 1931 மறைவு: 19- 10- 1987

**திதி: 06- 11- 1988**

அன்புத்தெய்வமே!
ஆழ்ந்த உறக்கம் கொண்டு
ஆண்டொன்று ஆகிவிட்டது
என்றாலும் எம்நெஞ்சில்
நீங்காமல் வாழ்கிறீர்கள்
அன்பு செய்ய உலகில்
ஆயிரம் பேர் உண்டு
ஆனாலும் அவனியில் உங்கள்
அன்புக்கும் நிகர் உண்டோ
சாவு நம்மைப்பிரிந்திடலாம்
சாந்தமான தங்கள் முகம்
எம் நினைவை விட்டு அகலாது
உங்களுடன் நாங்கள் உரிமையுடன்
பழகிய நாட்கள் எங்களது வாழ்வில்
இறுதிவரை நிலைத்திருக்கும்.
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கும்.

மனைவி, மகள், உற்றார்,
உறவினர்கள், நண்பர்கள்.

டச்சு றோட்,
கோப்பாய் தெற்கு. (7600)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



### திருமதி இ. திரேஸம்மாள்

தோற்றம்: 03 - 06 - 1919 மறைவு: 06 - 10 1988

அன்பினால் எம்மையெல்லாம் ஆட்கொண்ட
அன்னையே தாயே! உயர்
பண்புகளைத்துமே உமதாக்கி
வாழ்ந்தெமக்கு வழிகாட்டி இன்று நீர் எம்
கண்களெல்லாம் நாம் வாட
விண்ணுலகம் சென்றீரோ உம் பிரிவு இம்
மண்ணுலகில் வாழும் மட்டும் - உம்
மக்களெம்மை வாட்டுமம்மா நீர்
மறுபிறவி எடுத்து வந்து - எம்
மனக் கலக்கம் தீர்ப்பீரோ - உம்
பிரிவால் வாடும்.

பிள்ளைகள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்,
உறவினர்.

இல. 113, வித்யா ஸ்ரோர்ஸ்,
முல்லைத்தீவு வீதி,
தர்மபுரம். (7854)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டியும்

அமரர்

### உயர்திரு இளையதம்பி செல்லப்பா தியாகராசா (ஈ. எஸ். தியாகராசா)
(ஓய்வுபெற்ற பிரதம அஞ்சல் அதிபர்-திருகோணமலை)

மலர்வு: 18- 12- 1926 உதிர்வு: 6- 10- 1988

"அறிவில் சிறந்தாய் ஈ எஸ் ரி
ஆற்றலில் சிறந்தாய் ஈ எஸ் ரி
இதயத்தில் சிறந்தாய் ஈ எஸ் ரி
ஈகையில் சிறந்தாய் ஈ எஸ் ரி
உண்மையில் சிறந்தாய் ஈ எஸ் ரி
ஊக்கத்தில் சிறந்தாய் ஈ எஸ் ரி
எண்ணத்தில் உயர்ந்தாய் ஈ எஸ் ரி
ஏற்பதில் திகழ்ந்தாய் ஈ எஸ் ரி
ஒற்றுமையாய் திகழ்ந்தாய் ஈ எஸ் ரி
ஓயாமல் உழைத்தாய் ஈ எஸ் ரி
ஔவியம் அறுத்தாய் ஈ எஸ் ரி
எம்மனதில் என்றும் நிறைந்தாய் ஈ எஸ் ரி"

அமரர் தியாகராசாவின் நினைவு அஞ்சலியும் அந்தியேட்டியும் கோப்பாய் பூதாவடம் ஒழுங்கையில் அமைந்திருக்கும் அன்னாரின் இல்லத்தில் 6-11-88 ஞாயிற்றுக்கிழமை நடைபெறும். அத்தருணத்தில் அவரின் அன்பர்கள் சமூகம் கொடுத்து அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்குமாறு அன்புடன் வேண்டப்படுகின்றீர்கள்.

அஞ்சல் தொலைத்தொடர்பு,
இளைப்பாறிய சேவையாளர் நலன்புரிக்கழகம்.
75, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (7883)

## ஓராண்டு நினைவஞ்சலி



### சுப்பையா நடராஜா

ஆண்டவன் படைப்பு: 10 2 1929.
அழிப்பு: 19 10-1987.
திதி: 6. 11. 1988.

எமது அன்புத் தந்தையே!
அழுதிட மனமது ஆறவில்லை
அதை எழுதிடத் துடிக்கிறோம் முடியவில்லை
அப்பா நீங்கள் எங்களை விட்டுப்
பிரிந்துசென்று
ஆண்டு ஒன்று ஆயினும் உங்கள் நினைவுகள்
என்றும் பசுமையாய் உள்ளன.
உங்கள் ஆத்மா சாந்தி அடைய எந்நாளும்
பிரார்த்திக்கின்றோம்

தங்கள் நினைவுடன் உயிர்வாழும்:
மனைவி, மக்கள், மருமக்கள்
பேரன்மார், சகோதரர்கள்
மைத்துனர் மைத்துனிகள் மற்றும்
உற்றார் உறவினர்கள்

தலையாளி,
கொக்குவில். (7871)

## மேலும் ஒருவர் தெரிவு

யாழ்ப்பாணம் நவ 6
ஆரம்பக்கல்வி ஆசிரியர் தெரிவுக்கு மேலும் ஒருவரது பெயர் வெளியிடப்பட்டது.

கொண்டாவில் மேற்கைச்சேர்ந்த எஸ் செல்வமலர்என்பவரது பெயரே வெளியிடப்பட்டது. (ஒ-9)

## வர்த்தக சங்கம் கலைப்பு

யாழ்ப்பாணம், நவ 6
திருநெல்வேலி வர்த்தகர் சங்கம்நேற்று முதல் கலைக்கப் பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. (உ)

# ஜனநாயக அமைப்புகள் மூலமே மனித உரிமைகளைப் பெறமுடியும்

## மனித உரிமைதினத்தில்கல்லூரிஅதிபர் உரை

யாழ்ப்பாணம், நவ 6
எமக்கு மனித உரிமைகளைப் பெற்றுத்தரக் கூடிய அமைப்பு ஜனநாயக அமைப்புகளே. இந்த அமைப்புகள் எமக்கு வழங்கப்பட்டிருக்கும் சுதந்திரங்களைப் பாதுகாக்கின்றன மனித உரிமைகள் மதிக்கப்படும் வரை எமது சுதந்திரங்கள் பாதுகாக்கப்பட வாய்ப்புண்டு''

மானிப்பாய் மகளிர் கல்லூரியில நடைபெற்ற மனித உரிமைகள் தினவைபவத்தில் உரையாற்றும்பொழுது கல்லூரி அதிபர் திருமதி சரோஜினி கல்யாணசுந்தரம் இவ்வாறு கூறினார்.

நவாலி வை. எம். சி. ஏ உப தலைவரும் பிரபல சமூகசேவையாளருமான லயன் டபிள்யூ என். தேவகடாட்சம் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார்.

திருமதி கல்யாண சுந்தரேசன் தனது உரையில மேலும் கூறியதாவது "உலகிலே மக்கள் பிறவியிலேயே சுதந்திரமாகப் பிறக்கின்றனர். சட்டத்தின்முன் எல்லோரும் சமமாகவே கருதப்படுகின்றனர். உயர்ந்தவன் தாழ்ந்தவன் ஏழை, பணக்காரன், கறுப்பினத்தவன், வெள்ளை இனத்தவன் என்ற பேதம் இருக்கக் கூடாது என்று நாகரிக உலகம்கருதுகிறது. இந்த உரிமை உள்ள உலகத்தைத் தரவல்லது ஜனநாயக அமைப்பாகும்.

இப்படிஅவர்கூறினார்.

ஐ நா சபையையும் மனித உரிமைகளையும் அடிப்படையாக வைத்து வினா விடைப் போட்டி ஒன்றைதிரு.தேவகடாட்சம் நடத்தினார் இப் போட்டியில் 11-ஆம், 12 ஆம் வருட மாணவிகள் பங்குபற்றினர்.

கனிஷ்ட பிரிவு மாணவிகளின் "ஏழைச் சிறுமி" என்ற நாடகமும் சிரேஷ்ட பிரிவு மாணவிகளின் "நேர்முகப் பரீட்சை" என்ற நாடகமும் இடம்பெற்றன. "மனித உரிமைகளை மதித்திடுவோம்" என்ற பாடல் மாணவிகளால் இசையுடன் பாடப்பட்டது. (ச)

## ஓராண்டு நினைவஞ்சலி



### சரவணமுத்து குகதாசன்
(மின் அத்தியட்சகர்)

ஆண்டவன் படைப்பு: 08-05-1950
அழிப்பு: 06 11-1987

அன்புத் தெய்வமே, ஆறுது, ஆறாது அழுதாலும் தீராது இளம் வயதில் நெடும் பயணம் சென்றதும் ஏனோ? தூணாக இருந்த உருவம் தூசாக மாறியதும் கனவோ?
பெற்ற பாலன் கரத்தினில் இருக்க
உற்ற மனைவி குழவியை அணைக்க
கலங்கிய உள்ளத்தைக் கடிதினில் அகற்றி
அப்பா என்றழைக்க அருகதையற்று விட்டோம். அரவணைக்க உங்களைப் போல் இவ்வுலகில் யாருமில்லை என்றும் எங்கள் இதயங்களில் நிலைபெற்றிருப்பீர்கள்.
தங்களின் ஆத்மா சாந்தி அடைய
ஆண்டவனை இறைஞ்சி நிற்கும்:

'குகவாசா' மனைவி, மக்கள்,
கைதடி நுணாவில், தாய் சகோதரர்கள்,
சாவகச்சேரி. மாமனார், மாமியார்,
(7876) மைத்துனர்கள்.

## ஓராண்டு நினைவஞ்சலி



மலர்வு:- 1- 3- 1952

● ● ●

உதிர்வு:- 19- 10 - 1987

### கந்தையா இராஜேந்திரன் (தவம்)
(இ. போ சபையின் ஊழியர்)

உதய சூரியனே! எங்கள் பாரிஜாத மலரமுகே! பிஞ்சு முக அழகை நீ பிறந்தபோது நாம் கண்டோம். அன்புக்கோர் மகனே, பாசத்துக்கோர் அண்ணனே! ஆண்டொன்று சென்றாலும் மனதினில் அமைதியில்லை. கண்ணை இமை காப்பது போல் காத்து வந்தோமையா. ஆனால் பணிவறைக்குப் போகுமுன் பாதையின் எமன் ஷெல் வடிவில் வந்ததேனோ உனக்கு ஏனய்யா இந்த நிலை வர வேண்டும் விழுது விடுவாய் எனக் காத்திருந்தோம் ஆனால் வீணானதே எங்கள் கற்பனையய்யா! அம்மா அழுத கண்ணீர் ஆறாய் பெருகுதடா என் செல்வமே! நடு மகனாய் பிறந்து எம்மைத்தாங்குவாய் என்றிருந்தோம் சிரிப்பின் நிறை மதியே! சீராட்டு வாய் என்றிருந்தோம். நீ இல்லாமல் உன் வீடு ஒளியிழந்து விட்டதையா எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்தி விட்டு மீளாத்துயில் கொண்ட எம் அன்புத் தெய்வமே! ஓராண்டு உருண்டோடிச் சென்றாலும் தங்கள் அழியாச் சுவடுகள் எம்மனதில் ஆர்ப்பரித்து நிற்குதய்யா.

உன் ஆத்மா சாந்தியடைய கண்ணீர் அஞ்சலியை அம்பாளின் பொற்பாதங்களில் அர்ச்சிக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்
அப்பா, அம்மா, அண்ணன், அக்கா,
தம்பிமார், தங்கை,
மச்சான், மச்சாள்மார். (7882)

## முதல் ஆண்டு நினைவு அஞ்சலி



### கிருஷ்ணபிள்ளை சத்தியசீலன்
(கொழும்பு துறைமுக அதிகாரசபை மேற்பார்வையாளர்)

தோற்றம்: 23. 3. 1937 மறைவு: 19. 10. 1987

**திதி: 6. 11. 1988**

அன்பின் திருவருளாய் பண்பின் ஒளிச்சுடராய் விளங்கி எங்களை ஆறாத்துயரில் ஆழ்த்தி விட்டு மீளாத்துயில் கொண்டு இறைவனடி சேர்ந்த எங்கள் அன்புத்தந்தையே! உமது ஆத்மா சாந்தியடையஇறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உமது பிரிவால் துயருறும்,
மனைவி, மக்கள், மருமகன்,
பெருமகன்,

"அன்னவில்லா",
K. K. S. றோட், கொக்குவில். (7734)

## 31 ஆம நாள் நினைவு அஞ்சலியும் நன்றி நவிலலும



### திரு. கு. ஆலாலசுந்தரம்

தோற்றம்:- 02-04-1926 மறைவு:- 07 10-1988

அன்னாரது இறுதி அடக்க ஆராதனையில் கலந்து கொண்டு இறுதி அஞ்சலி செலுத்தியோருக்கும் பல வழிகளிலும் உதவி நல்கிய உற்றார் உறவினர் நண்பர்களுக்கும், அனுதாபச் செய்திகள் அனுப்பிய அனைவருக்கும் எமது உளமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்

06 - 11 - 1988 ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெற இருக்கும் தேவ ஆராதனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு, உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரையும் அன்பாய் வேண்டுகின்றோம்.

மனைவி, பிள்ளைகள்

"பெத்தலகேம்"
கரவெட்டி-கிழக்கு,
கரவெட்டி. (7868)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொய்யாமொழி

**குறள்:**

மருவுக மாசற்ரூர் கேண்மைஒன் றீத்தும்
ஒருவுக ஒப்பிலார் நட்பு

**பொருள்:**

குற்றமற்றவருடைய நட்பைக் கொள்ள வேண்டும்; ஒத்த பண்பு இல்லாதவருடைய நட்பை ஒன்றைக் கொடுத்தாவது கைவிட வேண்டும்.


# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை

இல:- 292/2நாவலர் வீதி, தொலைபேசி: 24805 22073
யாழ்ப்பாணம்.
06- 1 1988 த. பெ இல 23


## யாரிடம் முறையிடுவது?

வெளிநாடுகளில் இருந்து வடபகுதி மக்களுக்கு அனுப்பப்படும் காசோலைகள், டிராப்டுகள் மோசடி செய்யப்படுவது குறித்து அடிக்கடி செய்திகள் வெளி வருகின்றன.

கட்டார் நாட்டிலிருந்து, நெல்லியடியைச் சேர்ந்த ஒருவருக்கு அனுப்பப்பட்ட 'டிராப்ட்'' ஒன்று, எவ்வாறு கொழும்பில் வைத்து மோசடி செய்யப்பட்டது என்பதை அதனை அனுப்பியவரே விவரித்து, உரிய ஆவணங்களுடன் உதயனுக்கு அனுப்பி இருந்தார்.

காசோலைகளையும், டிராப்டுகளையும் மாற்றுவதற்கு, அடையாள அட்டைகள் முதற்கொண்டு பொய்யான கையொப்பம் போடும் வரைக்கும் எவ்வாறு எத்தனை மோசடிகள் செய்ய படுகின்றன என்பதை அவர் தெரிவித்திருந்தார்.

தமிழ் இளைஞர்கள், வேலைவாய்ப்பில் சிங்கள அரசுகளால நூற்றுக்குத் 99 வீதம் புறக்கணிக்கப்பட்டு வருவது எல்லோரும் அறிந்த உண்மை. அரசாங்கம் மறுக்க முடியாத உண்மை.

இந்தக் காரணத்தால் தமிழ் இளைஞர்கள் பலரும் வேலை தேடி, தொழில் நாடி அரபு நாடுகளுக்கும், மேற்கு நாடுகளுக்கும் செல்ல வேண்டியதாயிற்று.

அந்த நாடுகளில் தொழில் பெறுவதற்கு ஒவ்வொரு தமிழ் இளைஞனும் எத்தனை கஷ்டங்களை இன்னல்களை, இடர்ப்பாடுகளை அனுபவிக்கிறன் என்பதை எழுதித் தெரிய வேண்டுவதில்லை வடபகுதியில் உள்ள (அனேகமாக) ஒவ்வொரு பெற்றோரும் அந்த இன்னல்களை அனுபவ ரீதியாக உணர்ந்தவர்கள்.

சொந்த ஊரிலிருந்து புறப்பட்டு, கொழும்பு செல்லல், அங்கிருந்து வேலை கிடைத்த வெளிநாடு சென்றடைதல், வேலையை ஏற்றுக் கொள்ளுதல், நம்பியபடி வேலை கிடைத்தல் என்று ஒவ்வொரு கட்டம் கட்டமாக, தமிழ் இளைஞர்கள் படும் கஷ்டங்கள் கணக்கில் அடங்கா.

எத்தனையோ பெற்றோர், காணிகளை விற்று, வாழ்நாள் முழுவதும் உழைந்துக் கட்டிய வீடுகளை விற்று நகைகளை விற்றுத் தமது பிள்ளைகளை வெளிநாடுகளுக்கு அனுப்பி இருக்கிறார்கள் வெளிநாட்டு வேலை மூலம் அதனைப் பெறுவதற்குச் செலவிடும் பணத்தை உழைக்கலாம் என்ற நம்பிக்கையுடனேயே அப்படிச் செய்கிறார்கள்.

பல குடும்பங்கள் தமது அன்றுடத் தேவைகளுக்கு பிள்ளைகள் அனுப்பும் பணத்தையே நம்பி இருக்கின்றன இன்றைய தமிழர் பொருளாதாரம் உள்ள நிலையில் வெளிநாட்டில் வேலை புரிவோர் அனுப்பும் பணமே சற்று ''நின்று பிடிக்கிறது'' என்று கூறினும் மிகையாகாது.

இத்தகைய நிலையில், வெளிநாடுகளில் இருந்த வடபகுதிக்கு அனுப்பப்படும் பணம் மோசடி செய்யப்படுவது வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போலாகும்.

இந்த மோசடிகளைத் தடுக்க கொழும்பு அரசாங்கம் ஏதாவது செய்யுமா? வங்கிகள் தான் தமிழர்களுக்கு உதவுமா? யாரிடம் முறையிடுவது?

## மூடப்பட்ட கடைகளை திறப்பதற்கு அனுமதி

வவுனியா, நவ 6

வவுனியாவில் டஸ் நிலையக்கட்டடத் தொகுதியில் பாதுகாப்புக் காரணங்களுக்காக மூடப்பட்டிருந்த 19 கடைகளையும் மீண்டும் திறந்து வியாபாரம் செய்ய இந்தியப் படை அதிகாரிகள் அனுமதி வழங்கியுள்ளார்கள்.

பாதிக்கப்பட்ட கடை உரிமையாளர்கள் அதிகாரிகளை நேரடியாகச் சந்தித்து விடுத்த வேண்டுகோளையடுத்தே அனுமதி வழங்கப்பட்டது (உ-164)

## பூஸாவிலிருந்து விடுதலையானோர்: யாழ் செஞ்சிலுவைச் சங்கம் உதவி

யாழ்ப்பாணம், நவ.6

பூஸா இராணுவத் தடுப்புமுகாமில் இருந்து விடுதலை செய்யப்பட்டவர்களுக்கும் இராணுவ நடவடிக்கைகளினால் வீடுகளை இழந்து ''தர்மப் பணம்'' பெறுபவர்களுக்கும் யாழ் செஞ்சிலுவைச் சங்கம் நிவாரணப் பொருள்களை வழங்கி வருகின்றது.

பூஸாமுகாமில் இருந்து விடுதலை செய்யப்பட்டவர்களுக்கு செஞ்சிலுவைச் சங்கத்தால், துணிப்பார்சல்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

இராணுவ நடவடிக்கைகளினால் தமது வீடுகளை இழந்து அரசாங்கத்தால் வழங்கப்படும் ''தர்மப்பணத்தை'' பெறுபவர்களுக்கு உணவுப் பார்சல்கள் வழங்கப்பட்டு வருகின்றன (ச-5,ப

# ஆப்கனில் அரசியல், இராணுவ ஸ்திரநிலை ஏற்படும் வரை சோவியத் துருப்புக்கள் இருக்கும்!

## மாஸ்கோவில் துணைப்பிரதமர் அறிவிப்பு

மாஸ்கோ, நவ 5

ஆப்கனிஸ்தானில் அரசியல், இராணுவ ஸ்திரநிலை ஏற்பட்ட பின்னரே அங்குள்ள எஞ்சிய சோவியத் துருப்புக்கள் விலக்கிக் கொள்ளப்படும்.

அதுவரை துருப்புக்களின் வாபஸ் இடைநிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் என்று சோவியத் துணைப் பிரதமர் மாஸ்கோவில் அறிவித்தார்.

கிளர்ச்சியாளர்கள் ஆப்கனில் உள்ள சோவியத் படைமுகாம்கள் மீதும் தீவிரத் தாக்குதல்கள் நடத்தி வருவதே இந்த முடிவை எடுக்கக் காரணம் என்றும் துணைப்பிரதமர் சொன்னார்.

சோவியத் அரசின் இத்திடீர் முடிவு குறித்து அமெரிக்க அதிபர்கவலை தெரிவித்தார்.

சோவியத்துருப்புக்கள் வாபஸ் வாங்கப்படுதல் தற்காலிகமாக இடைநிறுத்தி வைக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டிருப்பது ஓரளவு நிம்மதி தருவதாகவும் அதிபர் றேகன் தெரிவித்தார்.

ஆப்கனிஸ்தானில் உள்ள ஒன்றரை லட்சம் துருப்புக்களில் ஜெனிவா உடன்படிக்கையின் கீழ் கமார் ஒரு லட்சம் துருப்புக்கள் விலக்கிக் கொள்ளப்பட்டு விட்டன.

இன்னும் 50 ஆயிரம் சோவியத் துருப்புக்களே ஆப்கனில் உள்ளன.

கிளர்ச்சிக்காரர்களின் தீவிரத் தாக்குதலைச் சமாளிக்க சோவியத் அரசு நவீன அதிசக்தி வாய்ந்த ஏவுகணைகளை ஆப்கன் அரசுப் படைகளுக்கு வழங்கியிருக்கிறது.

தரையில் இருந்து 90 மைல்கள் தூரத்துக்கு பாய்ந்து சென்று தாக்கும் சக்தி கொண்டவை அந்த ஏவுகணைகள் என்று அறிவிக்கப்பட்டது. (எ)

மாலைதீவில்

## ஆட்சி கவிழ்ப்பு முயற்சிக்கு அரசியல் காரணம் அல்லவாம்

மாலே, நவ 5

மாலைதீவு ஜனாதிபதி மாமுன் அப்துல கயூம் நேற்றுசெய்தியாளர் மகாநாட்டில் பேசினார்.

பலவந்த ஆட்சிக் கவிழ்ப்பு நடவடிக்கையை முறியடிக்க இந்திய அரசு உதவியது.

விரைந்து இராணுவ உதவியை அனுப்பியதற்காக பிரதமா ராஜீவ் காந்திக்கு நன்றி தெரிவிக்கிறேன்.

இந்த ஆட்சிக்கவிழ்ப்பு முயற்சிக்கு அரசியல் நாக்கம் எதுவும்இல்லை. இது கூலிப்பட்டாளங்களின் வேலைதான்.

இப்படிஜனாதிபதிகயூம் சொன்னார்.

வெளியுறவு அமைச்சர் அப்துல்லா ஜமீலும் இந்திய உதவிக்கு நன்றி தெரிவித்தார்.

நாட்டின் நிலைமை கட்டுக்குள் இருப்பதாக ஜனாதிபதியும் வெளியுறவு அமைச்சரும் தெரிவித்தனர்.

### எட்டுமாதம் பயிற்சி

இதனிடையில் — கூலிப்படையினருக்கு இலங்கையில் எட்டு மாதங்களாக ஆயுதப் பயிற்சிவழங்கப்பட்டது.

இப்படி மாலைதீவு அரசு குற்றஞ் சுமத்தியிருப்பதாக வெரித்தாஸ் வானொலி நேற்று அறிவித்தது.

### நன்றி

மாலைதீவு அரசுக்கு இராணுவ உதவியை விரைந்து அனுப்பியதற்காக இந்திய அரசுக்கு நேபாள மன்னரும் பொதுநலவாய அமைப்பின் செயலாளர் ஸ்ரீகத்ரப்பாலும் பாராட்டுத் தெரிவித்துள்ளனர். (எ)

எதிர்க்கட்சி கூட்டணிக்கு எதிராக

## ''இ. காங்கிரஸ் கூட்டணி அமைக்க வேண்டும்''

### டாங்கே கூறுகிறர்

பம்பாய், நவ.5

''எதிர்க்கட்சி கூட்டணிக்கு எதிராக இ. காங்கிரஸ் கூட்டணி அமைக்க வேண்டும்'' என்று பழம்பெரும் கம்யூனிஸ்டு கட்சி தலைவர் எஸ் ஏ. டாங்கே கூறியுள்ளார்.

இது குறித்து எஸ்.ஏ. டாங்கே பம்பாயில்வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டு இருப்பதாவது,-

எதிர்க்கட்சி கூட்டணி ''சில கட்சிகள் கண்ணை மூடிக்கொண்டு இ. காங்கிரஸை எதிர்க்கின்றன. காங்கிரஸ் எதிர்ப்பை மட்டும் கொள்கையாக வைத்து போராடுவது உண்மையான ஜனநாயகத்தை ஏற்படுத்த முடியாது.

இப்போது எதிர்க்கட்சிகள் கூட்டணி அமைத்து செயல்பட்டு வருகின்றன. இவர்களுக்கு உண்மையானகொள்கை எதுவும் இல்லை. நாட்டின் ஒற்றுமைக்கும் ஒருமைப்பாட்டுக்கும் எதிராக அவர்கள் அணி இயங்கி வருகிறது. எதிர்க்கட்சி அணி தலைதூக்கினல் நாட்டில் எதேச்சதிகாரப் போக்கு தான் ஏற்படும்.

### புதிய கூட்டணி

எனவே எதிர்க்கட்சி கூட்டணிக்கு எதிராக இ. காங்கிரஸ் கூட்டணி அமைக்க வேண்டும். இ. காங்கிரஸ் தலைவர் கமலபதி திரிபாதியின் யோசனையை நானும் ஏற்கிறேன்.

இப்போதுள்ள சூழ்நிலையில் இ. காங்கிரஸ் கூட்டணி அமைப்பது அவசியம் மட்டும் அல்ல அவசரமும் ஆகும். மற்ற கம்யூனிஸ்டு கட்சியினரும் இ. காங்கிரஸ் தலைவர்களும் இதைப் புரிந்து கொண்டு செயல்பட வேண்டும்.''

இவ்வாறு டாங்கே கூறியுள்ளார். (எ-4)

### முதல் தடவை

வார்ஸோ, நவ 5

பிரிட்டிஷ் பிரதமர் மார்கரட் தாட்சர் போலந்து விஜயத்தின் போது, கிடான்ஸ்க் சென்று சுதந்திர தொழிற்சங்கத் தலைவர் வால்சேயைச்சந்தித்தார்

மேற்கு நாட்டுத் தலைவர் ஒருவர் கிடான்ஸ்க் சென்று திரு. வால்சேயைச்சந்தித்தது இதுவே முதல் தடவையாகும்

### துருக்கி மீது மன்னிப்புச் சபை கண்டனம்!

துருக்கியில் அரசியல் கைதிகள் சித்திரவதை செய்யப்படுவதாக சர்வதேச மன்னிப்புச் சபை கண்டனம் தெரிவித்துள்ளது.

மன்னிப்புச் சபை கடைசியாக வெளியிட்ட அறிக்கையில் இக் கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசியல் கைதிகளாக தடுத்துவைக்கப்பட்டிருப்பவர்கள் பெரும்பாலோர் சித்திரவதை ஆபத்தை எதிர்நோக்கி இருப்பதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது (எ)

# புதிதாகப் பரவிவரும் ''மஞ்சள்காமாலை பீ'': மிக ஆபத்தானது; மரண வீதமும் அதிகரிக்கும்

## கருத்தரங்கில் டாக்டர் சிவகுமாரன்

யாழ்ப்பாணம், நவ 6

'மஞ்சள் காமாலை பீ' நோய் மிகவும் ஆபத்தானது மரண விகிதமும் அதிகரிக்கும்.

யாழ் போதனு வைத்தியசாலை டாகடர் எஸ். சிவகுமாரன் 'மஞ்சள் காமாலை பீ' பற்று உரையாற்றுகையில் மேற்கண்டவாறு கூறினர்.

எய்ட்ஸ், மஞ்சள் காமாலை பீ' போதைவஸ்து ஆகியவை பற்றிய சுகாதாரக் கருத்தரங்கு யாழ் தாதிமார் பயிற்சிக் கல்லூரியில் யாழ் பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் டாக்டர்என். கனகசபை தலைமையில் நடைபெற்றது

இதில் சுகாதார வைத்திய அதிகாரிகள், மருத்துவ நிலையப் பொறுப்பதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

எஸ் டாக்டர் சிவகுமாரன்மேலும் தெரிவித்ததாவது:-

இதுவரை காலமும் மஞ்சள் காமாலை 'ஏ' என்ற நோய் காணப்பட்டது.

தற்போது மஞ்சள் காமாலை 'பீ' என்ற புதிய ரகநோய் ஏற்பட்டுள்ளது.

இந்நோயால் பீடிக்கப்பட்டவர்களில் பத்துச் சதவீதமானோர் நோய்க்காவிகளாக மாறுகின்றனர்

இதனால் இந்நோய் மேலும் பலருக்குப் பரவ ஏதுவாகிறது

நெருக்கமாகப் பழகுவதன் மூலமும் நோயாளியின் உடம்பிலிருந்து வெளியேறும் திரவங்கள் மூலமே இதுதொற்றும்.

ஆய்வுகள் பரிசோதனை மூலம் இதனை உறுதிப்படுத்கலாம். இரத்ததானம் செய்பவர்களின் இரத்தமும் பரிசோதனை செய்யப்பட வேண்டும்.

இப்படி அவர் கூறினர்.

பிதல்லிப்பளை சுகாதவைத்திய அதிகாரி டாக்டர் தெய்வேந்திரம் போதைவஸ்து பாவனை பற்றி உரையாற்றினர்

போதைவஸ்து உடல், உள, சமுதாய பொருளாதாரப் பிரச்சினைகளை ஏற்படுத்துகிறது. 20 முதல் 40 வயதானவர்கள் அதிகமாக பாதிக்கப்படுகிறர்கள்

யாழ்பகுதியில் ஆண்-பெண் இருபாலரும் போதைவஸ்துவுக்கு அடிமையாகி வருகிறர்கள். இது 1987 இலும் பார்க்க 1988 இல் ஐந்து மடங்காக அதிகரித்துள்ளது.

போதைவஸ்துவினல் 15 முதல் 30 சதவீத மரணங்கள் ஏற்படுகின்றன.

இலங்கையில் நடக்கும் விபத்துக்களில் 20 முதல் 25 சதவீதம் போதைவஸ்து பாவனையால் ஏற்படுகின்றன.

களவுகள், பாரதூரமான குற்றச் செயல்கள், தற்கொலைகள், விவாகரத்துக்கள், பொருளாதாரப் பிரச்சினைகள், கொலைகள் ஆகியனவும் போதைவஸ்துவால் ஏற்படுகின்றன.

பாடசாலை உயர் வகுப்பு மாணவர்களுக்கும் பாடசாலைப் படிப்பை முடித்துவிட்டு விலகும் மாணவர்களுக்கும் 20 முதல் 40 வயதுக்கு உட்பட்டோர் அனைவருக்கும் போதைவஸ்து பாவனையால் ஏற்படும் அனர்த்தங்கள் பற்றி விளக்கிச் சுகாதாரக் கல்வி அளிக்க வேண்டியது அவசியம்.

இப்படி அவர் கூறினர்.

தொற்று நோய்த் தடுப்பு நிபுணர் டாக்டர் சா விஜயராசா எய்ட்ஸ் பற்றி உரையாற்றினர்.

உலக சுகாதார ஸ்தாபனத்திலுள்ள 154 நாடுகளில் 128 நாடுகளில் எய்ட்ஸ் நோய் பரவியுள்ளது.

1972 இல் 16 நாடுகளில் 711 பேர் பாதிக்கப்பட்டனர்.

1987 இல் 123 நாடுகளில் 59583 பேர் பாதிக்கப்பட்டனர்.

1888 இல் 128 நாடுகளில் 10 லட்சம் பேர் பாதிக்கப்பட்டனர்.

1991 இல் 30 லட்சமாக இது அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அமெரிக்கா, பிரான்ஸ் மேற்கு ஜேர்மனி, இங்கிலாந்து, இத்தாலி ஆகிய நாடுகள் இந் நோய் பாதிப்பில் முன்னணியிலுள்ளன.

இந்நோய் உடம்பிலுள்ள எதிர்ப்புச் சக்தியை இல்லாமல்செய்து சாதாரண நோய்களுக்குத் தாக்குப்பிடிக்க முடியாத நிலையை உண்டாக்குகிறது.

நோயைக் கண்டுபிடிப்பதற்கும் சிகிச்சை அளிப்பதற்கும் பெரும் செலவு ஏற்படுகிறது.

சமூக பொருளாதார நிலையையும் குடும்பக கௌரவத்தையும் பெரிதும் பாதிக்கும் இந் நோய்க்கு தடை மருந்தோ சிகிச்சை அளிக்க உரிய மருந்தோ இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை

இந்நோய் வராமல் தடுப்பதற்கு சுகாதாரக் கல்வியை மக்கள் மத்தியில் போதிக்க விரைவில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் இலங்கையில் வயிற்றோட்டம், வயிற்றுளைவு வாந்திபேதி, நெருப்புக்காய்ச்சல், காசநோய் ம் மலேரியா, புழுவியாதிகள் ஆகியன முக்கிய சுகாதாரப் பிரச்சினைகளாக இருந்தன.

மேற்கு நாடுகளில் சாதாரண நோய்களாகவுள்ள எய்ட்ஸ், மஞ்சள் காமாலை 'பீ' மற்றும் போதை வஸ்துப் பாவனை ஆகிய மூன்றும் தற்போது இலங்கையில் பாரிய சுகாதாரப் பிரச்சினைகளால் தலை தூக்கியுள்ளன.

இதுபற்றி நாம் பீதியடையாமல் தடுப்பு முறைகளை சுகாதார கல்வி மூலம் மக்களுக்கு அறிவுறுத்தல்வேண்டும்.

இப்படி டாக்டர் விஜயராசா கூறினர்.

இறுதியில் உரையாற்றிய பிரதி சுகாதாரப் பணிப்பாளர் தமதுரையில், மருத்துவப் பிரிவினருக்கும் நோய்த் தடைப்பகுதியினருக்குமிடையில் ஒத்துழைப்பு அவசியமெனவும். திட்டமிட்ட சுகாதாரக்கல்வியை சம்பந்தப்பட்ட பிரிவினர்களுக்கு அளிக்க வேண்டுமெனவும் வலியுறுத்திக் கூறினர் (இ-18)

### கால்வாய்கள் துப்பரவு

இரண்டு ஆண்டுகளாக கால்வாய்களில் தேங்கிக் கிடந்த மண்ணை வெளியே அகற்றி கிளிநொச்சி நீர்பாசனச் சபைப் பகுதிகளை துப்பரவு செய்து வருகின்றனர். (ச-ரி)

## மரணச்சடங்குச் செலவு பண உதவி நிறுத்தப்பட்டது

யாழ்ப்பாணம். நவ. 6

யாழ். செயலகத்தில் வழங்கப்பட்டு வந்த மரணச்சடங்குசெலவுக்கான இரண்டாயிரம் ரூபா பணம் நிறுத்தப்பட்டுள்ளது.

இராணுவ அசம்பாவிதங்களினல் பாதிப்படைந்த குடும்பங்களுக்கு நஷ்டஈட்டுத் தொகையை வழங்க புனர்வாழ்வு அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளதன் [illegible] இப்பணம் நிறுத்தப்பட்டது.

இனி இந்தக் கொடுப்பனவு நஷ்டஈட்டுத் தொகையுடன் சேர்ந்து கிராமசேவையாளர் பிரிவு மூலமாக சம்பந்தப்பட்டவர்களுக்கு வழங்கப்படும்

இதற்கான விண்ணப்பப்படிவங்களைசம்பந்தப்பட்டோர் கருந்த அத்தாட்சிகளைச்சமர்ப்பித்து கிராம சேவையாளரிடம் இருந்து பெற்றுக்கொள்ளலாம் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-10)

## காரைநகரில் தேடுதல்

காரைநகரில் சென்ற புதன்கிழமை இடம் பெற்ற இந்திய அமைதிப்படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான மோதலில் விடுதலைப் புலிகளின் காரைநகர் பிரதேசப் பொறுப்பாளர் நந்தன் சைனைட் அருந்தி மரணமானதை அடுத்து காரைநகரின் பல பகுதிகள் கடுமையான தேடுதலுக்குள்ளாக்கப்படுகின்றன

குறிப்பாக பலிகாடு, கருங்காலி, ஆலடி, கோவளம், சிவகாமி அம்மன் கோவிலடி ஆகிய பகுதிகளில் தேடுதல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இது இவ்வாறு இருக்க கடந்த புதன் நடந்த சம்பவத்தை அடுத்து விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்ட இளைஞர் சிலர் விடுவிக்கப்படவில்லை.

இவர்களின் பெற்றோர்கள் தினமும் அமைதிப்படை முகாம் சென்று திரும்புவதைக் காணக் கூடியதாக இருக்கிறது.

வலந்தலைச் சந்தியில் சோதனைகள் தீவிரப் படுத்தப்பட்டுள்ளன. (இ- 73)

### அஷ்டலக்ஷ்மி கலண்டர் சிறப்பு விற்பனை

1989 ஆம் ஆண்டு அஷ்டலக்ஷ்மி கலண்டர் சிறப்பு விற்பனை கைதடி சிவா பிரின்டேஸ்சில் இன்று 6 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும்.

உதயன் - சஞ்சீவி நிர்வாக இயக்குநர் திரு. ஈ சரவணபவன் பிரதம அதிதியாகக் கலந்து கொள்வார்

ஆர். எஸ். அச்சக அதிபர் திரு வி செல்வநாதன் விற்பனையை ஆரம்பித்து வைப்பார்.

இலங்கை வங்கி முன்னள் மாவட்ட முகாமையார் திரு செ. ஸ்ரீரங்கநாதன் வைபவத்தில் சிறப்புரை வழங்குவார்.

### சைவசமயப் பாடப் பரீட்சை

சைவபரிபாலன சபையாரால் நடத்தப்படும் சைவசமய பாடப் பரீட்சை இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8 30 மணிக்கு இலங்கை ரீதியில் நடைபெறும் பரீட்சை மேற்பார்வையாளர் விபரம், பிரவேச அட்டவணை அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

### கட்டட வேலைகள் ஆரம்பமாகும்

1985 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு பூர்த்தி செய்யப்படாத பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை கட்டட வேலைகள் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளன.

வடமராட்சியின்சாதகமற்ற சூழ்நிலைகள் காரணமாக இந்தக் கட்டட வேலைகள் தடைப்பட்டிருந்தன. (இ-5)

### முத்திரைகள் தட்டுப்பாடு

வடமராட்சிப் பகுதியில் ரூபா 100, ரூபா 50 முத்திரைகளை வாங்க முடியாமல் இப்பகுதி பொதுமக்கள் பெரும் அவதியுறுகின்றனர்.

அதனால் இம் முத்திரைகள் தனியார் கடைகளில் கூடுதல் விலை கொடுத்து வாங்கக் கூடியதாக இருக்கிறது என்று தெரிவிக்கப்படுகிறது. (ச-70)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

சேட்டிங் ✶ சூட்டிங்ஸ்
✶ குழந்தைகளுக்கான ஆடைகள்
சகலவிதமான
✶ றெடிமேட் ஆடைகளுக்கும்
சிறந்த இடம்

மயூரா சென்ரர்
13B, நவீனசந்தை. :-: யாழ்நகர்.

# உதயன்

06 - 11 - 1988 ஞாயிற்றுக்கிழமை

திருமண வைபவங்களுக்கேற்ற
✶ மணிப்புரி
✶ காஞ்சிபுரம் ✶ பெனரஸ்
சேலைகளைப் பெற்றுக் கொள்ள

மயூரா சென்ரர்
13B, நவீன சந்தை, :-: யாழ்நகர்.

## ஒப்புநோக்குநர் (PROOF READER)

வர்த்தக அச்சகம் ஒன்றில் பணி புரிவதற்கு அனுபவம் நிறைந்த ஒப்புநோக்குநர் ஒருவர் உடனடியாகத் தேவை.

தமிழிலும், ஆங்கிலத்திலும் திறமையுடன் ஒப்புநோக்கும் தகுதி உள்ளவர்கள். தம்மைப்பற்றிய முழுச் சுய விவரங்களுடனும் 07-11-1988 திங்கட்கிழமை நேரில் வரவும்.

தகுதி, அனுபவம் என்பனவற்றுக்கு ஏற்றபடி சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

யாழ். ஐக்கிய வியாபாரச் சங்கம் (வரை)

## பங்காளர்களின் முகவரிகள்

மேற்படி சங்கப் பங்காளர்கள் யாவரையும் தங்கள் தற்போதைய முகவரிகளை 30-11-88 க்கு முன பங்குச் சான்றிதழ் காட்டி அறிவிக்கவேண்டுகின்றோம். தபாலிலானால் போட்டோப்பிரதிகளே அனுப்புக. நேர்லானால் வேலை நாட்களில் காலை 9-11 மணிக்குள் வருக.

-காரியதரிசி

346, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். (7489)

உ
ஓம் தத் ஸத்பரப் பிரம்மனே நம

## ஞாபகார்த்த பேருந்து நிலையத் திறப்பு விழா அழைப்பு



### அமரர் கந்தர் சிவலிங்கம்

மலர்வு: 13-08-1924 மறைவு: 24-05-1988

வட்டுநகர் இலுப்பையடி ஸ்ரீமுத்துமாரி அம்பாள் தேவஸ்தான முதல்வரும் முன்னாள் வித்தியாலய அதிபருமான அமரர் கந்தர் சிவலிங்கம் அவர்கள் ஞாபகார்த்த பேருந்து தரிப்பு நிலையத் திறப்பு விழா அழைப்பு (06-11-88) ஞாயிற்றுக்கிழமை காலை 9-30 மணியளவில் த. அருணகிரிநாதன் தலைமையில் திரு. S. கனகரட்ணம் (வடபிராந்திய போக்குவரத்துச் சபைத் தலைவர்) அவர்களினால் திறந்து வைக்கப்படும். அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இடம்: வட்டு இந்துக்கல்லூரிக்கு அருகாமை

இங்ஙனம்
7888) விழாக் குழுவினர்.

மானிப்பாய்
## இந்துவின் சாதனை

யாழ்ப்பாணம், நவ 6

மானிப்பாய் இந்துக் கல்லூரி மாணவன் ஒருவர் ஜி.சி.ஈ. சாதாரண தர விசேட பரீட்சையில் எட்டுப் பாடங்களிலும் விசேட சித்தியைப் பெற்றுள்ளார்.

மேலும் இக் கல்லூரியில் மூன்று மாணவர்கள் ஏழு பாடங்களிலும் ஒரு மாணவன் ஆறு பாடங்களிலும் விசேட சித்திகளைப் பெற்றுள்ளனர்.

நடராசா ரவிச்சந்திரன் என்ற மாணவனே எட்டுப்பாடங்களிலும் விசேட சித்திகளைப் பெற்றுவராவர். (ஓ-10)

## சிவதீட்சை

யாழ்ப்பாணம், நவ. 6

திருநெல்வேலி சைவ வித்தியா விருத்திச் சங்க மண்டபத்தில் இன்று காலை 7-30 மணிக்கு சிவதீட்சை வைபவம் நடைபெறும்.

யாழ் சிவானந்த குருகுல சிவாச்சாரியார்கள் சிவதீட்சை வழங்குவார்கள்.

நல்லை ஆதீன குருமகா சந்நிதானம் அவர்கள் ஆசியுரை வழங்குவார்கள்.

நண்பகல் மகேஸ்வர பூசையும் மரம் நாட்டு வைபவமும் நடைபெறும். (ச,

## தொண்டமான்,..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கைகளில் வரும் செய்திகளில் கூறப்படுவது போன்றதல்லாத சாதகமான சூழ் நிலையே நிலவுகிறது என்பது தான் எனது கருத்து.

அமைச்சர் தொண்டமான் எனது நாட்டிற்கு வரும் போது தமிழ் அகதிகளைத் திருப்பி அனுப்புவது பற்றி நான் பேசுவேன்.

கேள்வி: டிசம்பரில் தொண்டமான் அமைச்சராக இருப்பார் என்று எண்ணுகிறீர்களா?

மேற்கு ஜேர்மன் அமைச்சர் இதறகுப் பதிலளிக்காமல் சிரித்தார்.

கேள்வி: தமிழ் இனம் முழுவதையும் தொண்டமான் பிரதி நிதித்துவப் படுத்துகிறாரா?

மே. ஜேர்மன் அமைச்சர்: தொண்டமான் ஒரு மதிப்புக்குரிய தலைவர். (ஓ-எ)

## வ.பி.போக்கு....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பொழுது அவரது காரை மறித்த சிலர் அவரைக் காரில் இருந்து இறங்குமாறு பணித்தனராம்.

காரில் இருந்து இறங்கிய அவர் துப்பாக்கிநபர்களைக் கண்டவுடன் ஓட முற்பட்ட பொழுது துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மரணமானார்.

யாழ். திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. க கேசவன் யாழ் ஆஸ்பத்திரி பொலிஸ் பிரிவில் மரண விசாரணையை நடத்தினார்.

திரு. கனகசபை தனபாலசிங்கம் 1972 ஆம் ஆண்டில் இருந்து வட பிராந்திய போக்குவரத்துச் சபையில் பொதுசனத் தொடர்பு அதிகாரியாக கடமையாற்றி வந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஓ-9-10

# நிவாரணம் வழங்கும் வேலை இலங்கை வங்கியில் ஆரம்பம்

யாழ்ப்பாணம் நவ 6

இடம்பெயர்ந்த குடும்பங்கள் மீளக் குடியமர்தலுக்கான ஆயிரம் ரூபா நிவாரணப்பணம் வழங்கும் வேலையை இலங்கை வங்கி நேற்று ஆரம்பித்தது.

சுமார் ஆயிரம் குடும்பங்கள் தமக்குரிய நிவாரணப் பணமாக ஆயிரம் ரூபாவை நேற்றுப் பெற்றுக்கொண்டனர்.

நேற்றைய மழையையும் பொருட்படுத்தாமல் பொதுமக்கள் நிவாரணம் பெறுவதற்காகக் காத்து நிற்பதைக்காணக் கூடியதாக இருந்தது.

வங்கி அதிகாரிகளுக்குத் துணையாகச் செயலக அதிகாரிகளும் கடமையில் ஈடுபட்டிருந்தார்கள்.

நேற்றைறாதினம் தமக்குரிய நிவாரணப்பணத்தைப் பெற்றுக்கொள்ளத் தவறியவர்களுக்கான நிவாரணம் வழங்கப்படும் திகதி பின்பு அறிவிக்கப்படும் என்று வங்கி அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஓ-5)

## சரத்பாபு வீட்டிலிருந்து பொருள்கள் மீட்பு

யாழ்ப்பாணம், நவ. 6

கடந்த முதலாம் திகதி கொக்குவிலில் அமைதிப் படையினர் நடத்திய தேடுதல் நடவடிக்கைகளின் போது சரத்பாபு என்பவரின் வீட்டில் இருந்து பல பொருள்கள் மீட்கப்பட்டன.

இவைபொதுமக்களிடமிருந்து கொள்ளையடிக்கப்பட்ட, களவாடப்பட்ட பொருள்கள்

கடந்த 4ஆம் திகதி உதயனில் வெளிவந்த ஒருசெய்தி தொடர்பாக யாழ். நகரக் கமாண்டன்ட் தெரிவித்த விளக்கம் ஒன்றில் மேற்கண்டவாறு குறிப்பிடபட்டுள்ளது.

இப்பொருள்களை உரியவர்கள் யாழ். மணிக்கூட்டுக் கோபுரப்பகுதியில் உள்ள அமைதிப்படை அலுவலகத்துடன் தொடர்புகொண்டுபெற்றுக்கொள்ளலாம் என்றும்—

டெக்னிக் ஸ்டீரியோ எஸ். எச். 8045' டெக்னிக் சிந்தர் சிலர் எவ் எம். ஏ. எம் - ஸ்டீரியோ டேனர் எஸ் பி. இன்ட் 6400, அம்பிளியயர் பயனியர் ஸ்டீரியோ கஸட் வி பி. எவ் 750, இரு குருண்டிக் ஸ்பீக்கர் பெட்டி. எவ். எம். எம். 1500, இருவோக்மன் ஸ்பீக்கர்கள். முழு டிஸ்க யூனிட் ஒன்று, எஸ். பி. 88, சோனி ரி. வி. 500744 நஷனல்வீடியோ கஸட் பி 41 ரி ஏ 01515 ஒரு சிவப்பு நூரவியோ சூட்கேஸ் ஆகியவையே மீட்கப்பட்ட பொருள்கள் என்றும் யாழ்நகர கமாண்டன்ட் தெரிவித்துள்ளது.

## எதிர்ப்பு....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வேட்பாளராக போட்டியிட வைப்பதற்கு முயற்சிகள் நடைபெறறு வருகின்றன.

எனினும் ஏழுகட்சிகளும் பொது வேலைத் திட்டம் ஒன்றை இன்னும் தயாரித்து முடிக்கவல்லை இந்த பொது வேலைத்திட்டம் வெற்றியளிக்கும் பட்சத்தில் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா ஏழு கட்சி கூட்டணியின் பொது வேட்பாளராகலாம்.

இந்த ஏழுகட்சி கூட்டணியுடன் ஜே வி. பியையும் இணைக்க முயற்சிகள் நடககின்றன. ஆனால் ஜே வி. பி ஜனாதிபதி தேர்தலிலும்பார்க்க பொதுத்தேர் தலையே முக்கிய குறியாகக் கொண்டுள்ளது.

எனவே அது நாடாளுமன்றம் உடனடியாக கலைக்கப்பட்டு பொதுத் தேர்தலுக்கான நாள் ஒன்று தற்போதே அறிவிக்கப்படவேண்டும் என்பதை வலியுறுத்தி தொடர்ந்தும் வேலை நிறுத்தம், ஹர்த்தால் ஆகியவற்றை நடத்தி நடவடிக்கை எடுத்து வருவதாக கொழும்பில் இருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. (இ-5)

## மீன்பிடித்தடை

பகல் நேர மீன்பிடித்தலுக்கும் அனுமதி மறுக்கப்பட்டிருப்பதாக மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

பண்ணைவீதியால் குறிகட்டுவான், அல்லைப்பிட்டி, மண்கும்பான் பகுதிகளுக்குச் சென்று கடற்றொழிலில் ஈடுபடுகின்றவர்களும் அனுமதிக்கப்படமாட்டார்கள் என்று பண்ணை வீதி அமைதிப் படை சென்றியின் அறிவித்தல் பலகையில் எழுதப்பட்டுள்ளதாக மீனவர்கள் கூறினர். (இ-51)

## காலமானர்

கொழும்பு நவ 6

பிரபல இலக்கிய எழுத்தாளர் திரு. தேவதாசன் இரத்தினம் [வயது 84] நேற்று கொழும்பில் காலமானார்

1987 ஆம் ஆண்டு இவருக்கு ஜனாதிபதி விருது வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது: (ஓ-10)

## நேற்று....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வழங்கப்படும்.

மேற்படி பட்டியல் பிரஸ்தாப கிராம சேவையாளா பிரிவுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (ஓ-5)

## ரயில்,...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பிச் சென்றது.

இதேவேளை சரக்கு ரயில் ஒன்றும் வந்து சென்றது.

இன்றும்: ரயில் சேவை நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. [உ9

# மரண அறிவித்தல்கள்

## க. தனபாலசிங்கம்

காங்கேசன் துறையைச் சேர்ந்த க. தனபாலசிங்கம் (பொதுசன தொடர்பு அதிகாரி வட. பிராந்திய போக்குவரத்து சபை) அகாலமரணமானார். ஈமக்கிரியைகள் இன்று 06-11-88 காலை 10 மணியளவில் கீரிமலை வீதி காங்கேசன்துறையில் அவரது இல்லத்தில் நடைபெறும்.

தகவல்:
து. பாலசிங்கம்.
(7894)

## தாமோதரம்பிள்ளை சுப்பையா

திரு. தாமோதரம்பிள்ளை சுப்பையா 04-11-1988 அன்று காலமானார். இவர் சுருவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட காலஞ்சென்ற தாமோதரம்பிள்ளை, பார்வதி ஆகியோரின் அன்புப் புதல்வரும், சாரதாம்பாளின் அன்புக் கணவரும், மைதிலி, பாரதி (நோர்வே), மணிவாசகன் (குவைத்) ஆகியோரின் அருமைத் தந்தையும், திரு. பா. சுந்தரம் (பங்காளர்: நியூ லக்கி ஸ்ரார் ஜூவலறி யாழ்ப்பாணம்) அவர்களின் அன்பு மாமனாரும், விசாளினி, அபிராம் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். அன்னார் சண்முகநாதன், சிவக்கொழுந்து, நாகலிங்கம், கனகசுந்தரம் (சிவசாமி), மகாலெட்சுமி, ருக்குமணிதேவி ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 06-11-1988 இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு சுருவில் மயானத்தில் நடைபெறும்

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சுருவில், தகவல்:
ஊர்காவற்றுறை. பா. சுந்தரம்
(7747)

## திருமதி மேரி திரேஸ் சந்தியாப்பிள்ளை

இளவாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி மேரி திரேஸ் சந்தியாப்பிள்ளை 4 ஆம் திகதி அவுஸ்திரேலியாவில் காலமானார் இவர் வித்துவான் சந்தியாப்பிள்ளையின் மனைவியும், அமரர் வஸ்தியாம்பிள்ளை (பொடி மாஸ்ரர்), திருமதி அன்னம்மா மரியாம்பிள்ளை (பாண்டியன்தாழ்வு) லூர்தம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும், நியூமன், லிசி, ராணி, புஸ்பம், லூயிஸ், அருட்திரு செபஸ்ரியான் O M I மொன்வேட், நாயகம், டொமினிக் ஆகியோரின் தாயாரும், அருட் சகோதரி சொபியாவின் மாமியும், தேவாவின் சிறிய தாயாரும் ஆவார். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் மிக மனவேதனையுடன் அறியத் தருகின்றோம்.

தகவல்:
தேவா (பாண்டியன்தாழ்வு)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக் கிருத்தியமும்



### திருமதி இராசம்மா அழகரத்தினம்

மலர்வு: 4. 6. 1913 உதிர்வு: 7. 10. 1988

அன்பின் திருவுருவாய், பாசத்தின் பிறப்பிடமாய், பண்பின் நிறைவாய் வாழ்ந்த எம் அன்புத்தெய்வமே! எங்கள் நெஞ்சிருக்கும் வரை உங்கள் நினைவிருக்கும். தங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

9-10-88 இல் நடைபெற்ற அன்னாரின் இறுதிக் கிரியைகளில் நேரில் சமகமளித்தும் அனுதாபச் செய்திகள் அனுப்பியும் மற்றும் பலவழிகளிலும் உதவிய அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்,

அன்புடன் நினைவு கூரும்:
கணவர், பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

அன்னாரின் வீட்டுக் கிருத்திய கிரியைகள் 6 11 88 இன்று ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்

பொற்பதி வீதி, கொக்குவில்.
(7743)

## நான்காம் வருட நினைவு



### மிக்கேல்பிள்ளை தயாளன் (மகேசன்)

தாயக மண்ணில்: 31-05-1965 மேலிய விண்ணில்: 06-11-1984

திருமணங்கள் சொர்க்கத்தில்
நிச்சயிக்கப்படலாம்!
மரணங்கள் எங்கே நிச்சயிக்கப்படுகின்றன?
கர்ப்பத்திலா; இன்னொருவர் கரங்களிலா?
திருமணத்தைத் தேடுகின்ற வயதில் நீயோ
மண்ணினை மீட்கச் சென்றாய்!
வளர்தமிழ் காக்க வந்தாய்
கண்ணிலும், கருத்திலும் உன்
நெஞ்சினில் புறத்திலும்
உள்ளுமாய் சொரிந்த இரத்தம்
புனிதமாய் பரந்து இந்த
மண்ணினை நனைத்ததன்றோ
வளர்தமிழ் வாழ்வதற்கே!

பெற்றோர், சகோதர சகோதரிகள்,
மைத்துனர், உற்றார், உறவினர்,
நண்பர்கள்.

2, ஓடக்கரை வீதி,
குருநகர், யாழ்ப்பாணம். (C-446)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன்ஸ் [பிறைவேட்] லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 06-11-1988 இல்அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by New Uthayan Publications(pvt) Ltd 292/2 Navalar Road, Jaffna on Sunday 6th November 1988

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org